29th OCTOBER 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 55 | பக்கங்கள் - 14 | editor.uthayam@gmail.com

# இஸ்ரேலிய ஊடுருவல் இருப்புக்கு ஆபத்து சிக்கலான நிலைமை உருவாகலாம்

## பல்வேறு தரப்பினர் அரசுக்கு எடுத்துரைப்பு!

(சிறப்பு நிருபர் எம்.என்.முஹம்மத்)

இலங்கையில் இஸ்ரவேலர்களின் பிரசன்னம் பல மட்டங்களிலும் பேசுபொருளாக மாறியுள்ளது. குறிப்பாக இலங்கை அரசாங்கம் இது தொடர்பாக பல்வேறு வகையான விசாரணைகளை ஆரம்பிக்க இருப்பதாக அரசுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. முஸ்லிம் சமூக தலைமைகள் இது சம்பந்தமாக பல்வேறு மட்டங்களில் முயற்சிகளை எடுத்து வருகின்ற இந்நிலையில் இதனுடைய பாதிப்புகள் தொடர்பில் முஸ்லிம் அரசியல்வாதிகளும் சிங்கள அரசியல்வாதிகளும் பல்வேறு வகையான கருத்துக்களை முன்வைத்துள்ளனர். குறிப்பாக இஸ்ரவேலர்கள் உலக நாடுகளில் படிப்படியாக தங்களுடைய அதிகாரத்தை செலுத்தும் முறைமைகளை அறிந்து வைத்துள்ள அரசுகள், இது தொடர்பாக ஆரம்பத்திலேயே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல்வேறு வகையான அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. கார்டினல் மல்கம் ரஞ்சித் இது தொடர்பாக தனது கருத்தை முன் வைத்துள்ளார். அவருடைய கருத்தின் படி முஸ்லிம் சமூகத்தை பயங்கரவாத அமைப்பாக வெளிப்படுத்துவது இவர்களின் மிக முக்கிய நோக்கம் என்றும் முஸ்லிம் இளைஞர்கள் மிகவும் கவனமாக வழி நடாத்தப்படும் வேண்டும் என்ற கருத்தை அவர் முன் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகின் அனேக சமூக வலைத்தளங்களை உரிமையாக கொண்டுள்ள, அதே போன்று மொத்த உலகினதும் வங்கி முறைமைகளை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள யூதர்களுடன் ஃ இஸ்ரவேலர்களுடன் அரசு ஒரேயடியாக மோதுவது சிரம சாத்தியமானது. எனவே மிகவும் கவனமாக திட்டமிட்டு இந்நாட்டில் அவர்களுடைய நடவடிக்கைகளை அவதானிப்பது முக்கியமானது என்று பல தரப்பிலும் கருத்துக்கள்

02ம் பக்கம்பார்க்க...

# ஹிஸ்புல்லாஹ்வின் தலைவராக ஷெய்க் நயீம் காசீம் நியமனம்!

ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் புதிய தலைவராக ஷெய்க் நயீம் காசீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ் இயக்கத்தின் துணைப் பொதுச்செயலாளராக கடமையாற்றிய நிலையிலேயே தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் லெபனான் மீதான தாக்குதலில் ஹிஸ்புல்லாஹ்வின் தலைவர் ஹஸன் நஸருல்லாஹ் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

# முஸ்லிம் பிரமுகர்களை இலக்கு வைத்து வட்சப் கணக்குகள் செயலிழப்பு

## பணம் கறக்கும் கும்பல்கள் குறித்து பொலிஸில் முறைப்பாடு!

கடந்த சில வாரங்களாக முஸ்லிம்களை இலக்கு வைத்து றுாயவளயிீ கணக்குகள் செயலிழக்கப்பட்டு அதனூடாக பணம் திரட்டும் நடவடிக்கைகள் குறித்து போலீசாரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் முஸ்லிம் பிரமுகர்களின் றுாயவளயிீ கணக்குகளை செயலிழக்க செய்து அதனை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, அதன் மூலம் அப் பிரமுகர் களின்

02ம் பக்கம்பார்க்க...

# பயங்கரவாத தடைச்சட்டம் குறித்து புதிய பாராளுமன்றமே தீர்மானிக்கும்

## அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத்!



பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும். புதிய நாடாளுமன்றத்தில் முன்மொழியப்படும் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் மாத்திரமே சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடைச்

02ம் பக்கம்பார்க்க...

# அரச ஊழியர்களுக்கு ஜனவரியில் சம்பள அதிகரிப்பு

அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பள அதிகரிப்பு அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் முன்னெடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால கணக்கறிக்கையில் இதுதொடர்பில் யோசனை முன்வைக்க எதிர்பார்த்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

சம்பள அதிகரிப்பை எத்தனை ரூபாவால் மேற்கொள்வது என்பது தொடர்பில் தற்போதே அறிவிக்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.



கொழும்பின் சக்தி நீதான்!
பாராளுமன்றத்தில்..
எங்கள் குரலும் நீதான்!
முஜிபுர் றஹ்மான்
X 12




உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## இஸ்ரேலிய...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

முன்வைக்கப்படுகின்றன. இது தொடர்பாக அரச தரப்பில் ஆரம்பகட்ட நடவடிக்கைகளாக அவர்கள் மீது நடாத்தப்பட இருக்கும் பயங்கரவாத தாக்குதல்களை நிறுத்துவதில் முழு கவனத்தையும் செலுத்தும் அதே நேரம், சிங்கள அரசியல்வாதிகள் குறிப்பாக அறுகம்பே, வெலிகம போன்ற பகுதிகளில் வாழ்கின்ற அரசியல்வாதிகள் உடனடியாக இது தொடர்பாக விசாரணைகளை நடாத்தி அவர்கள் இந்த நாட்டில் வியாபாரங்களை நடத்துவதாக இருந்தால் அதன் சட்டத்தன்மை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரசை வேண்டியுள்ளனர்.

இப்பொழுது நாட்டில் தேர்தல் நடக்க இருக்கும் நிலையில் இந்த நிகழ்வு தேர்தலை பாதிக்கும் என அரசு அச்சப்படுகிறது. அதேபோன்று எதிர்க்கட்சிகளும் இதை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தலாம் என்ற அச்சத்தின் காரணமாக அரசு ஒரு மந்தமான போக்கை கடைபிடித்து வந்தாலும் பாராளுமன்ற தேர்தலின் பின்பு அரசு இது தொடர்பாக ஒரு விரிவான விசாரணையை நடத்தி இந்த தாக்குதலுக்கு பின்னால் இருப்பவர்கள் யார்? இந்த தாக்குதலின் ஊடாக இலங்கையில் ஏற்படப் போகின்ற பொருளாதார அரசியல் பாதிப்புகள் மற்றும் இலங்கையின் நன்மதிப்புக்கு ஏற்பட உள்ள பாதிப்புகள் தொடர்பாக ஒரு தெளிவான விசாரணை நடத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னொரு புறம் இவர்கள் இலங்கையினுடைய பல்வேறுபட்ட மட்டங்களில் எந்தளவுக்கு ஊடுருவி இருக்கிறார்கள் என்ற விடயம் பேசுபொருளாக மாறியுள்ளது. குறிப்பாக நாட்டினுடைய நிறுவனங்கள் அதே போன்று உல்லாச பயணத்துறை மற்றும் வியாபார துறைகளிலே இவர்கள் எந்த அளவுக்கு கால் பதித்துள்ளார்கள்? இவர்கள் வெறுமனே உல்லாச பயணிகளாக வருகின்றார்களா? அல்லது வேறு நோக்கங்களோடு இந்த நாட்டில் கால் பதிக்கிறார்களா? என்பது தொடர்பில் பல்வேறு வகையான ஆய்வுகள் முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக 1947 ஆம் ஆண்டுக்கு முன்பு இலங்கையும் இஸ்ரேலிய பூமியாக பிரேரிக்கப்பட்டமை தொடர்பிலும் இப்பொழுது பேசுபொருளாக மாறி வருகின்றது. சில தகவல்கள் குறிப்பிடுவது போன்று இலங்கையின் சில பகுதிகள் யூதர்கள் வாழ்வதற்கு வாக்களிக்கப்பட்ட பூமி என்ற கருத்தையும் சிலர் பேசினாலும் இவை எதுவும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் இல்லை.

சில புத்திஜீவிகள், இந்த அரசாங்கம் இது தொடர்பில் அவசரமாக நடவடிக்கை எடுக்காவிடில், இவர்களது வருகையை தடுக்காவிடில் நாட்டில் மிகவும் சிக்கலான ஒரு நிலைமை உருவாகி நாட்டினுடைய பொருளாதாரத்தை பாதிக்கும் என்ற கருத்தை முன்வைத்து வருகின்றனர். குறிப்பாக இவர்கள் இனி தொடர்ந்து உல்லாச பயணத் துறையில் ஈடுபடுவார்களாக இருந்தால், அவர்களுக்கு பயங்கரவாத தாக்குதல் எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருப்பதால் ஏனைய உல்லாச பயணிகளும் நாட்டுக்குள் வருவது தடைப்படும் என உல்லாச பயணத்துறை சார்ந்தவர்கள் அச்சப்படுகின்றார்கள்.

எனவே நாட்டுக்குப் பெரிதாக வருமானம் ஈட்டி தராத இஸ்ரவேலர்கள்ஃ யூதர்கள் இந்த நாட்டுக்கு வராமல் இருப்பது நாட்டுக்கும் நாட்டு நலனுக்கும் பாதுகாப்பானது என்ற கருத்து பரவலாக முன்வைக்கப்படும் நிலைமையில், அரசு இதுவரைக்கும் இது தொடர்பாக உத்தியோகபூர்வமான அறிக்கைகளை வெளியிடா விட்டாலும், உள் மட்டத்தில் அரசு பரவலாக வேலை செய்வதாக அரசுக்கு நெருக்கமான தரப்புகள் தெரிவிக்கின்றன.

சில மாதங்களுக்கு முன்பு யூதர்கள் செறிந்து வாழும் ஓரிடத்திலிருந்து ஒரு ட்ரோன் தாக்குதல் நடாத்தப்பட்டதாக வெலிகம இலுள்ள ஒரு மதரஸ ா விலிருந்து குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டாலும், இதுவரை அது தொடர்பான அறிக்கைகளோ ஆய்வுகளோ விசாரணைகளோ எந்த அளவுக்கு முன்னெடுக்கப்பட்டது என்பது தொடர்பாக எந்த கருத்துக்களும் முன்வைக்கப்படவில்லை.

இப்பொழுது பலரும் அந்த விடயத்தையும் தேடி பார்க்க வேண்டும். உண்மையில் அவர்கள் அவ்வாறான தாக்குதலை நடாத்தியிருந்தால் சகலரையும் இந்நாட்டில் இருந்து வெளியேற்றுவது அரசின் கடமை என்ற விடயத்தையும் குறிப்பிட்டு வருகின்றனர்.

இலங்கையில் காணப்படக்கூடிய வீசா கட்டுப்பாடுகளை தளர்த்துவதை தவிர்க்க வேண்டும் என்ற கருத்தும் இப்போது பரவலாக முன்வைக்கப்படுகின்றது.

## முஸ்லிம்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பேரில் பெருந்தொகையான பணத்தை அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது. இவ்வாறு கோரிக்கை விடுக்கப்படும் பலர் அப்புறம் மீதான அனுதாபத்தில் குறித்த தொகைகளை செலுத்தியதாகவும், ஆனால்

அது ஒரு கும்பலின் கைக்கு செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக பொலிஸாருக்கு புகார்கள் தெரிவிக்கப்பட்டாலும் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக தெரியவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர். மூத்த பத்திரிகையாளர் லத்தீப் பாரூக், முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவுத், மற்றொரு மூத்த பத்திரிகையாளரான என் எம் அமீன், பிரண்ஸி ராசீக், அஹதிய்யா இயக்கத்தின் தலைவர் உட்பட பலரது WhatsApp கணக்குகள் செயலிழக்கப்பட்டு அவர்கள் பேரிலே பெருமளவு பணம் கோரப்பட்டுள்ளது..

பலர் அப்பிரமுகர்களின் அனுதாபத்திலேயே பணங்களை செலுத்தி உள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாளர் எம் பி பாரூக் உட்பட பலரது றுாயவளயுி கள் செயலிழக்கப்பட்டு இருக்கின்றன. WhatsApp மூலமாக இவ்வாறான கோரிக்கைகள் பகிரப்படும் போது பாவனையாளர்கள் மிக நிதானமாக செயல்படுமாறும் ஏமாந்து விட வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

## பயங்கரவாத...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

சட்டத்தை நீக்குவது தொடர்பில் சமகால அரசாங்கம் ஆராயவில்லை என்றும் அறிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் விசேட ஊடகச்சந்திப்பு இன்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத்,

”குறித்த சட்டத்தை நீக்குவது குறித்து எவ்வித ஆராய்வுகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்து நீண்ட காலமாக உள்ளது. என்றாலும், திருத்தங்களை முன்மொழிந்து அவற்றை புதிய நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டால் மாத்திரமே சட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்ள முடியும்.

புதிய நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட பின்னரே பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதா இல்லையா என்பது குறித்து அரசாங்கம் இறுதி தீர்மானத்தை எடுக்கும்.” என்றார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தமிழ் தரப்பினர் தொடர்ந்து கோரி வருகின்றனர். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள பல்வேறு முயற்சிகளை தமிழ் தரப்பு மேற்கொண்ட போதிலும் கடுமையான இனவாதக் கருத்துகளால் அச்சட்டத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.







# வெல்லம்பிட்டியில் நடைபெற்ற மீலாத் சிறப்பு நிகழ்ச்சி











இர்ஷாத் ஏ காதர் நற்பணி மன்றம், இலங்கை வானொலி முஸ்லிம் சேவையுடன் இணைந்து வழங்கும் “ஸீரதுன் நபி மீலாத் சிறப்பு நிகழ்ச்சி இன்று வெல்லம்பிட்டி அக்ரம் பாய் பெங்குயிற் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் பாத்திமா றினூசியா ஜெளபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கொட்டாஞ்சேனை தாருல் அர்கம் மத்ரஸா மாணவன் ஐ.எம்.இப்றாஹிமின் கிறாத்தையடுத்து வரவேற்புரையை ஏற்பாட்டாளர் மனித நேயன் இர்ஷாத் ஏ காதர் நிகழ்த்தினார்.

கொலன்னாவ ஜூம்ஆ பள்ளித்தலைவரும் ஜே.ஜே. பவுண்டேஷன் பணிப்பாளருமான ஐ.வை.எம்.ஹனீப், சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம்.அமீன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

சிறப்புரையை பேருவளை ஜாமியா நளீமிய்யா இஸ்லாமிய கற்கைகள் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷைக் எஸ்.எச்.எம்.பளீல் நிகழ்த்தினார்.

கொழும்பு டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி மாணவர்களின் களிகம்பு நிகழ்வும் இடம்பெற்றது.

மருதமுனை கமால் இஸ்லாமிய பாடல்களை பாடினார்.

கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இர்ஷாத் ஏ காதர் நற்பணி மன்றத்தின் சார்பாக சிரேஷ்ட ஊடகவியலாளர் புர்கான் பீ இப்திகாரை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் பாத்திமா றினூசியா ஜெளபர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

குழுக்கள் முறையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.








தேர்தல் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க வேண்டுமாயின் தொடர்புகளுக்கு:

070 239 7210

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 OCTOBER 29 - TUESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# இஸ்ரேலியர்களின் அளவு கடந்த அத்துமீறல் நடவடிக்கை எடுக்குமா அரசு?

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவர் ஆலயம் இரு வாரங்களுக்கு முன் இலங்கையில் இருக்கும் இஸ்ரேலியர்களால் தாக்கப்படலாம் என விடுக்கப்பட்ட எச்சரிக்கையை அடுத்து இலங்கைக்குள் சியோனிஷ வாதிகள் மேற்கொள்ளும் அட்டகாசங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

அறுகம்பே உட்பட நாட்டின் பல கடற்கரை பிரதேசங்களுக்கு வரும் உல்லாச பயணிகள் சுற்றுலா விசாக்களை பெற்றுக் கொண்டு பல சட்டவிரோத செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருவதாக செய்திகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. நாட்டின் பல இடங்களிலும் அவர்களுடைய சமய வழிபாட்டு தலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சமய வழிபாட்டுத்தலங்களில் என்ன நடந்து வருகிறது என்பது கூட யாருக்கும் தெரியாத ஒரு மறைமுக நிலை காணப்படுகிறது. பொத்துவில் அறுகம்பே ஆனது முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வரும் ஒரு பிரதேசமாகும். அறுகம்பே பள்ளிவாசலுக்கு அருகே யூதர்களின் சபாத் எனும் வழிபாட்டுத்தலம் அமைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இயங்கி வரும் பள்ளிவாசலுக்கு அருகே யூதர்களின் வழிபாட்டுத்தலம் அமைக்கப்பட்டுள்ளமையானது பல கேள்விகளை எழுப்பி உள்ளது. பலஸ்தீன் யுத்தம் காரணமாக மிக நீண்ட காலமாக பகைமை நிலவிவரும் நிலையில் இவ்வாறு அருகருகே இரு வழிபாட்டுத்தலங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கியது யார்? மேலும் அவ்விடத்தில் பல வர்த்தக நிலையங்களை சியோனிஷ வாதிகள் நடாத்தி வருகின்றனர்.

வெளிநாட்டு விசாவில் வருவோருக்கு என்னென்ன செய்யலாம் என்பது பற்றி பல கட்டுப்பாடுகள் இருந்து வருகிற நிலையில், அவை எவற்றையும் மதிக்காது சியோனிஷ வாதிகள் இலங்கையில் பல்வேறு விதமான வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

முச்சக்கர வண்டிகள் ஓட்டும் தொழிலை கூட அவர்களே முன்னெடுக்கும் நிலை வரை இன்று இவ்விடயம் வியாபித்துள்ளது. இதன் மூலம் உள்ளூர் வாசிகளின் தொழில் பாங்குகள் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த கால அரசாங்கம் பல உலக நாடுகளுக்கும் விசா இன்றி நாட்டுக்குள் பிரவேசிக்கும் வசதியை வழங்கி இருந்தது. இஸ்ரேலுக்கும் இந்த வசதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனால் எவ்வித கட்டுப்பாடும் இன்றி இஸ்ரேலியர்கள் எமது நாட்டுக்குள் பிரவேசிப்பதோடு, விசா வழங்கப்பட்ட காலத்தை மீறி நாட்டுக்குள் வசிக்கின்றனர். பலஸ்தீனிய யுத்தத்தில் பச்சிளம் பாலகர்கள் உட்பட அப்பாவி மக்களை கொன்று குவித்து விட்டு, அதனால் ஏற்படும் விரக்தி மற்றும் வெறுப்பு நிலையை தணித்துக் கொள்வதற்காக புனர் வாழ்வளிப்பதற்காக இவர்கள் இங்கு அழைத்து வரப்படுவதாகவும் கூறப்படுகிறது. பெரட்டுகாமி கட்சியின் முக்கியஸ்தர்களின் ஒருவரானபுபுதுஜாகொடஅண்மையில்இதனைதெரிவித்திருந்தார். உலகின் பல நாடுகளில் கரையோர பிரதேசங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இஸ்ரேலியர்கள் செயற்பட்டு வருவதைப் போன்று, இலங்கையிலும் செயல்படுவதாக பல்வேறு தரப்பினர்கள் குற்றச்சாட்டுகளை எழுப்பி வருகின்றனர்.

நாட்டுக்குள் பிரவேசிக்கும் இவர்களது செயற்பாடுகளை அரசாங்கம் கவனிக்க தவறியுள்ளது. இன்னும் இரு தசாப்தங்களில் இவர்களது செயற்பாடுகள் நாட்டுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் என எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

பலஸ்தீன் யுத்தத்தில் ஈடுபடும் இஸ்ரேலிய படைவீரர்களின் படங்கள் மற்றும் சித்திரங்களை கரையோர பிரதேசங்களில் இந்த இஸ்ரேலிய சியோனிஷ வாதிகள் காட்சிப்படுத்தி வருவதும் நடந்தேறி வருகிறது. இறைமையுள்ள நாடொன்றில் சியோனிஷ வாதிகளின் இவ்வாறான செயற்பாடுகள் நாட்டின் இறைமைக்கே அச்சுறுத்தலாக அமையும். உல்லாச பிரயாணிகளாக வருகை தருபவர்களால் நாட்டுக்கு டொலர்கள் கிடைக்கப் பெறுகின்றன என்று அரசாங்கம் இவ்விடத்தில் பராமுகமாக இருக்கின்றது. இந்த ஆபத்திலிருந்து நாட்டை பாதுகாப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# குருநாகலைக்கு முஸ்லிம் உறுப்பினரைப் பெற பேதங்களை மறந்து ஒன்றுபடுங்கள்

## முன்னாள் மாநகர சபை உறுப்பினர் அப்துல் சத்தார் வேண்டுகோள்!


குருநாகல் மாவட்டத்தின் முஸ்லீம் ஒருவரை பாராளுமன்றத்திட்கு அனுப்புவதற்கு கட்சி பேதமின்றி முஸ்லிம்கள் ஒன்றுபட வேண்டும் என்று முன்னாள் மாநகர சபை உறுப்பினர் அப்துல் சத்தார் தெரிவித்தார், குருநாகல்,சாரகமவில்அமைந்துள்ள கிறீன் பார்க் ஹோட்டலில் நடைபெற்ற தனது ஆதரவாளர்களினுடனான விசேட சந்திப்பின் போது கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்தார் அவர் மேலும் பேசுகையில் 1994ம் ஆண்டு நடை பெற்ற போதுத்தேர்தலின் போது மர்ஹூம் அலவி அவர்கள் பாராளுமன்றம் சென்றதன் பின்பு பல வருடங்களாக ஒரு முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினறை பெற முடியாமல் போனது குருநாகல் முஸ்லிம் களின் துரதிஷ்டம் என்பதை விட ஒற்றுமை இல்லாத தன்மையும் சமூகம் ஒழுங்கான முறையில் வழி நடத்தப்பாடாதது முக்கிய காரணமாகும் சுமார் இன்று ஒரு இலட்சத்தித்து இருபதாயிராத்திட்கு கூடுதலான முஸ்லிம் வாக்குகளை வைத்துக்கொண்டு பல வருடங்களாக ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினறை நாங்கள் பெற முடியாதது சம்பந்தமாக வெட்கப்பட வேண்டும். பல வருடங்களாக குருநாகல் மாவட்டத்தின் முஸ்லிகளின் அரசியல் பிரச்சனைகளை அடையாளம் கண்ட ஒரு அரசியல்வாதியாக நான் இருந்தாலும் அரசியல் அதிகாரம் என்ற சக்தி இல்லாதபோது நாம் மிகவும் சங்கடப்பட்ட சந்தர்ப்பங்கள் அதிகம் இருந்தாலும் தமது வாக்குகளை ஒவ்வொரு முறையும் பெற்றுக்கொடுக்கும் போது முஸ்லிம் வாக்காளர்கள் இது பற்றி சிந்திப்பதில்லை என்றாலும் என்னிடம் ஒருவர் ஒரு பிரச்சனைக்கு வரும் போது நான் ஒரு நாளும் அரசியல் பார்ப்பதில்லை என்றாலும் சம்பிரதாய அரசியல் செய்யும் எமது முஸ்லிம் வாக்காளர்கள் ஒவ்வொரு தேர்தலிலும் தாம் சார்ந்த கட்சிக்கு மாத்திரமே வாக்காளிக்க வேண்டும் என்பதில் மிகவும் பிடி வாதமாக இருப்பது கவலைக்குறிய விடயமாகும் அது மட்டுமல்லாமல் ஒரே தேர்தலில் ஒரே சின்னத்தில் இரண்டு கட்சிகளில் இருவர் போட்டியிடும் போது தமது சுய நலத்தை மற்றுமே கருத்தாக கொண்டுள்ள அவைகளை மிகவும் சாதுர்யாமாக பயன்படுத்தும் முஸ்லீம் கட்சிகளின் தலைவர்கள் தமது பிரதிநிதியை மற்றும் தமக்கு பேரம் பேசுவதற்கு பிரயோஜனப்படுத்தும் நோக்கத்தில் விருப்பு வாக்குகளின் போது அடுத்த முஸ்லிம் கட்சியின் பிரதிநிதி வெற்றி பெறக்கூடாது என்பதில் மிகவும் உன்னிப்பாக இருந்து செயல் படுவது மிகவும் வருந்தக்கூடிய விடயம்.



2015 தேர்தலில் டாக்டர் ஷாபி அவர்களும் 2019 தேர்தலில் ரிஸ்வி ஜவஹர்ஷா அவர்களும் தெரிவு செய்யப்பட்ட கடைசி உறுப்பினருக்கு பின்னால் இருந்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கும்.

அது மட்டுமல்லாமல் கேகாலை மாவட்டத்தில் ஒரு வித்தியாசமான பாலினத்தை சேர்ந்த ஒரு திருநங்கை போட்டியிடுகிறார். ஆதலால் குருநாகல் முஸ்லிம்கள் சம்பந்தமாக எமது ஒரு முஸ்லிம் பிரதி நிதியை நாம் தெரிவு செய்வதில் பெரும்பான்மை சமூகம் நாம் இனவாதம் பேசுவதாக நினைக்க கூடாது.

கடந்த காலங்களில் இரண்டு முஸ்லிம் ஆளுநர்கள் வடமேல் மகாணத்திட்கு நியமிக்க பட்டிருந்தாலும் அவர்கள் குருநாகல் மாவட்ட முஸ்லிம்களின் பிரச்சனைகளை அடையாளம் காணவில்லை அதிலும் அவர்கள் தாம் சார்ந்த அரசியல் தலைவர்களின் திருப்தியில் அதிக அக்கறை காட்டுபவர்களாக இருந்து தமது அதிகாரங்களை பயன்படுத்தியதால் எங்கள் பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லை. இப்படியான கடந்த கால கசப்புகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றால் இந்த தேர்தலில் போட்டியிடக்கூடியவர்கர்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து அவருக்கு இந்த குருநாகல் மாவட்ட முழு முஸ்லிம்கலும் எதுவித பேதமுமின்றி வாக்காளிக்க வேண்டும், எனது முழு ஒத்துழைப்பும் நான் சார்ந்த அரசியலை மறந்து குருநாகல் மாவட்டத்தின் ஒரு முஸ்லிம் பிரதிநிதியை பாராளுமன்றம் அனுப்புவதாக மட்டுமே இருக்கும் என்று தெரிவித்தார்



# பொத்துவில் பிரதேசமெங்கும் முஷாரபுக்கு பாரிய எதிர்ப்பு!



(அபு அலா)

இம்முறை இடம்பெறவுள்ள பாராளுமன்ற தேர்தல் தற்போது சூடுபிடித்துள்ள நிலையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷ ாரபுக்கு பொத்துவில் பிரதேசமெங்கும் பாரிய எதிர்ப்பலைகள் எழும்பியுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப், மக்கள் சந்திப்பு நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காக செல்லும்போது, அப்பிரதேச பொதுமக்களினால் விரட்டியடிக்கப்பட்ட சம்பவம் (23) இடம்பெற்றது.

இவ்வாறான சம்பவங்கள் பொத்துவில் பிரதேசத்தில் பல பகுதிகளில் தொடர்ந்து இடம்பெற்றும் வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மதுபானசாலைக்கு அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொடுத்து பணம் பெற்றமை, பொத்துவில் பெரிய பள்ளிவாயலில் பொய் சத்தியம் செய்தமை, குழந்தை எரிப்புக்கு ஆதரவு கொடுத்தமை, முக்கியமான விடயங்களுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்காமல் ஏமாற்றம் செய்தமை போன்ற செயற்பாடுகளை முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் செய்தார் என்றும், அவர் செய்த அந்த செயலை ஒருநாளும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே, அவருக்கெதிராக இந்த பாரிய எதிர்ப்புக்கள் பொத்துவில் பிரதேசமெங்கும் நாளுக்குநாள் கூடிக்கொண்டே செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் மாவட்டத்தின் பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பதே எமது இலக்கு

**– மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் –**



வடபுல மக்களுக்கு அடைக்கலமளித்த புத்தளம் மாவட்டத்தின் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பதில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கரிசனையுடன் செயற்பட்டு வருவதாக, கட்சியின் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில், ஐக்கிய மக்கள் கூட்டணியில், புத்தளம் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களான என்.டி.எம். தாஹிர் மற்றும் எம்.எச். முஹம்மத் ஆகியோரை ஆதரித்து, வெள்ளிக்கிழமை (25) அல்-காசிம் சிட்டியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்,


“புத்தளம் மாவட்டத்தின் பிரதிநிதித்துவத்தை வென்றெடுப்பதில், எமது கட்சி அயராது உழைக்கிறது. இதற்காகப் பல அர்ப்பணிப்புக்களையும் செய்து வருகிறது.

நெய்னா மரிக்காருக்குப் பின்னர், புத்தளம் மாவட்டத்தின் பிரதிநிதித்துவத்தை எமது கட்சியே காப்பாற்றியது. நவவிக்குத் தேசியப்பட்டியல் பிரதிநிதித்துவத்தை வழங்கினோம். இதையடுத்து, கடந்த பொதுத் தேர்தலில் அலிசப்ரி ரஹீமை வெல்லச் செய்தோம்.

வடபுலத்திலிருந்து வந்தோர்களை எம்.பியாக்கும் வேலையை நாங்கள் செய்யவில்லை. புத்தளம் மண்ணைச் சேர்ந்தவர்களையே இத்தேர்தலில் நிறுத்தியுள்ளோம். இந்த ஊரின் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றுவதற்காக எமது கட்சி முயற்சிகளை எடுத்தபோது, சிலர் பிரதேசவாதம் பேசினர். இவர்களை நாம் மறந்துவிட முடியாது. இன்று இவர்களே நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர்.

சுமார், ஒன்றரை இலட்சம் சிறுபான்மை வாக்குகளை வைத்துக்கொண்டு, ஒரு பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கே இவ்வூர் தடுமாறியது. இவ்விடயத்தில், உங்களுக்கு அரசியலில் வழிகாட்டியது, இந்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸே!

வடபுலத்து மக்களுக்காக, புத்தளம் மக்கள் செய்த அர்ப்பணிப்புக்களை என்றுமே எமது கட்சி மதிக்கிறது. கடந்த காலத்தில், இம்மண்ணின் பிரதிநிதித்துவத்தை மலின சலுகைகளுக்காகக் காட்டிக்கொடுத்தவரை தண்டிக்க முற்பட்டபோது, முட்டுக்கட்டை போட்டவர்கள், இன்று ஊருக்காகப் பேசுவதாகக் கூறுவதை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?“ என்று குறிப்பிட்டார்.

# அனைத்து இன, மத மக்களையும் உள்வாங்கி மட்டக்களப்பை கட்டியெழுப்புவதே எனது கனவு

### மட்டக்களப்பு தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் பிர்தௌஸ் நளீமி

மட்டக்களப்பில் வாழும் அனைத்து இன, மத, கொள்கை வேறுபாடுகளைக் கொண்ட மக்களையும் இலங்கையர் எனும் அடையாளத்தின் கீழ் ஒன்றிணைப்பதே தனது பிரதான இலக்கு என தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் எம்.பி.எம். பிர்தௌஸ் நளீமி தெரிவித்தார்.

காத்தான்குடியில் நடைபெற்ற முதலாவது தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

அனைவரையும் உள்ளடக்கிய மட்டக்களப்பு என்பதே எனது கனவாகும். கடந்த காலங்களில் யுத்தம் மற்றும் வேறு பல காரணங்களால் மக்கள் மத்தியில் பிரிவினைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

அரசியல்வாதிகளும் தமது வாக்கு வங்கிக்காக இங்கு வாழும் சமூகங்களை பிரித்து வைப்பதிலேயே குறியாக இருந்துள்ளனர். இதற்காகவே பிரதேசவாதமும் மக்கள் மனங்களில் விதைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இந்த வேறுபாடுகளை மறந்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் 38 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளை வழங்கியுள்ளனர். நாம் வேறுபாடுகளை மறந்து இலங்கையர் என்ற குடையின் கீழ் ஒன்றிணைந்ததன் மூலமே இந்த வெற்றி சாத்தியமாகியுள்ளது.

அதேபோன்றுதான் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலிலும் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட வேண்டும். இதற்கான சரியான தெரிவு இனத்துவ சிந்தனைகளை முன்னிறுத்திய கட்சிகளை விடுத்து, சகல இன மக்களையும் ஒன்றிணைக்கக் கூடிய தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பதேயாகும்.

தமிழ் பிரதிநிதி ஒருவர் முஸ்லிம் களுக்காக குரல் கொடுக்கின்ற நிலைமையும், அதேபோல முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கின்ற நிலைமையும் இந்த



மாவட்டத்தில் உருவாக்கப்பட வேண்டும். ஓர் ஊரைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் அந்த ஊருக்கு மாத்திரமன்றி முழு மாவட்டத்திற்குமே சேவை செய்கின்ற அரசியல் கலாசாரத்தை நாம் தோற்றுவிக்க வேண்டும். அந்த வகையில் நான் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டால் வெறுமனே ஓர் ஊருக்காக அல்லது ஓர் இனத்துக்காக மாத்திரமின்றி முழு மாவட்டத்திற்குமான பிரதிநிதியாக செயல்படுவேன் என்றார்.

# நுவரகம் பிரதேச செயலகத்தில் முதியோர் தின நிகழ்வு




(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

வலுவான விருந்தோம்பல் மற்றும் ஆதரவு சேவை பொறிமுறையின் மூலம் நிலையான முதியோர் வாழ்வு என்ற கருப்பொருளின் அடிப்படையில் நுவரகம் பிரதேச செயலகமும் மெதடிஸ்த சபை ஜெஃப்லின்க் நிறுவனமும் இணைந்து நடத்திய முதியோர் விழா அலுவலக கேட்போர் கூடத்தில் (24) நடைபெற்றது.

முதியோர் தினத்துடன் இணைந்து முதியோர்கள் நினைவாக வாழ்வதை நோக்கமாகக் கொண்டு மெதடிஸ்த சபை மற்றும் ஜெஃப்லின்க் நிறுவனத்தால் செயல்படுத்தும் முதியோர்களை சமூக அடிப்படையில் உள்ளடக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 80 சிரேஷ்ட பிரஜைகளுக்கு 60 லட்சம் சுயதொழில் உதவியும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மத்திய நுவரகம் பிரதேச செயலகப் பிரிவின் சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 110 கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# கற்பிட்டியில் இலவச பாரம்பரிய நாட்டு வைத்திய முகாம்



(எம்.எச்.எம்.சியாஜ், எம்.யூ.எம்.சனூன்)

கற்பிட்டி செடோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் இலவச பாரம்பரிய நாட்டு வைத்திய முகாம் சனிக்கிழமை (26) கற்பிட்டி செடோ சிரீ லங்கா நிறுவனத்தின் தலைமையகத்தில் வைத்தியர் வேற பிட்டிய தலைமையில் இடம்பெற்றது.

இவ் இலவச நாட்டு வைத்திய முகாமில் கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள நாட்டு வைத்தியர்களான இயற்கை மூலிகை மருத்துவர் மற்றும் சர்வாங்கம் வைத்தியர்களான பி.எம் முஹமட் இமாம்தீன், பி.எம்.எம்.எஸ். அப்துல் காதர், ஏ. எம் .நாசர், காயங்கள், புற்றுநோய், உடைவு முறிவு வைத்தியர் பி.எம். மேரி மெடில்டா, உடைவு முறிவு, மூல நோய் , வைத்தியர் இனாயா பேகம் மற்றும் உடைவு முறிவு வைத்தியர்களான மொஹமட் அஷ்ரப், உமைதின் பிச்சை, நிசார்தீன், சி, பி. பெட்ரிக் சர்ஜுன் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு பட்ட நோய்களுக்கும் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் இலவசமாக மருந்துகளும் வழங்கப்பட்டது.

# வெல்லம்பிட்டியில் நடைபெற்ற மீலாத் சிறப்பு நிகழ்ச்சி



(அஷ்ரப் ஏ சமட்)

இர்ஷாத் ஏ காதர் நற்பணி மன்றம், இலங்கை வானொலி முஸ்லிம் சேவையுடன் இணைந்து வழங்கும் " ஸீரதுன் நபி மீலாத் சிறப்பு நிகழ்ச்சி இன்று வெல்லம்பிட்டி அக்ரம் பாய் பெங்குயிற் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் பாத்திமா றினூசியா ஜௌபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கொட்டாஞ்சேனை தாருல் அர்கம் மத்ரஸா மாணவன் ஐ.எம். இப்றாஹிமின் கிறாத்தையடுத்து வரவேற்புரையை ஏற்பாட்டாளர் மனித நேயன் இர்ஷாத் ஏ காதர் நிகழ்த்தினார். கொலன்னாவ ஜும்ஆ பள்ளித் தலைவரும் ஜே.ஜே.பவுண்டேஷன் பணிப்பாளருமான ஐ.வை.எம். ஹனீப், சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம்.அமீன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

சிறப்புரையை பேருவளை ஜாமியா நளீமிய்யா இஸ்லாமிய கற்கைகள் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷைக் எஸ்.எச்.எம்.பளீல் நிகழ்த்தினார்.

கொழும்பு டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி மாணவர்களின் களிகம்பு நிகழ்வும் இடம்பெற்றது.

இர்ஷாத் ஏ காதர் நற்பணி மன்றத்தின் சார்பாக சிரேஷ்ட ஊடகவியலாளர் புர்கான் பீ இப்திகாரை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் பாத்திமா றினூசியா ஜௌபர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வாழ்வாதார திட்டங்களை சகல இன மக்களுக்கும் பகிர்தளித்தவர் ஜெமில்

(எம். எப். றிபாஸ்)

திகாமடுல்ல மாவட்டத்தில் புதிய ஜனநாயக முன்னணி கட்சியின் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், வேட்பாளருமான ஏ.எம்.ஜெமீலை



ஆதரித்து இறக்காமம், வரிப்பத்தான் சேனை ஆகிய பிரதேசங்களில் மக்கள் சந்திப்பும், காரியாலய திறப்பும் இடம்பெற்றது.

கட்சியின் ஆதரவாளர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வுக்கு வேட்பாளர் ஜெமீல் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கிழக்கு மாகாண சபையின் உறுப்பினராகவிருந்த காலத்தில் சகல இன மக்களை அரவணைத்துக் கொண்டு பல்வேறுபட்ட அபிவிருத்திகளையும், தொழில் வாய்ப்புக்களையும் , வாழ்வாதாரத் திட்டங்களையும் முன்னெடுத்துச் சென்ற ஒருவர் நடைபெற உள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதையிட்டு பெரிதும் சந்தோஷப்படுவதாக மக்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

# தகவல் அறியும் சட்டம் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு



(எம் எச் எம் சியாஜ் - றிஸ்வி ஹுஸைன், எம்.யூ.எம்.சனூன்)

கற்பிட்டி செடோ சிறீ லங்கா நிறுவனத்தின் ஒருங்கிணைப்பில் புத்தளம் தகவல் அறியும் உரிமை மையத்தின் ஏற்பாட்டில் ட்ரான்ஷ் பேரன்சி இன்டர்நெசனல் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பங்குபற்றுதலுடன் சனிக்கிழமை (26) கற்பிட்டி சியாப் மண்டபத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வு புத்தளம் மாவட்ட தகவல் உரிமை மையத்தின் பொறுப்பாளரும் சைல்ட் விஷன் நிறுவனத்தின் பணியாளருமான ஏ.சீ.எம் நுமைஸின் ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் ஜவாஹிறா நாஹூர், எஸ்.எல்.ஏ.சீ முகாமைத்துவ சட்டத்தரணி இஸட் ஹனியா, உதவி நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் சிந்துஜா மற்றும் பயிலுனர் ஹஷானி ஆகியோர் கலந்து கொண்டனர் .இந்நிகழ்வில் தகவல் அறியும் உரிமைச் சட்டம், ஆட்சியியல் பற்றிய சிவில் சமூக பகுப்பாய்வு, லஞ்சம் மற்றும் ஊழல் ஆகிய தலைப்புக்களில் விழிப்புணர்வு தெளிவூட்டல்களும் சட்டதிட்டங்கள் பற்றிய அறிவூட்டல்களும் வழங்கப்பட்டன.

இக் கருத்தரங்கில் கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள அரச அதிகாரிகள், ஆசிரியர்கள், கிராம சேவையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்கள் பாலர் பாடசாலை ஆசிரியர்கள், மீனவ சங்கத்தினர், மகளீர் சங்கத்தினர், இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சிறந்த அழகு கலை, சரும பராமரிப்பாளருக்கான விருது பாதிமா நப்ராவிற்கு

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

பல்வேறு துறைகளிலும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வரும் தெரிவு செய்யப்பட்ட இலங்கை ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை தமிழ் விருது விழா, ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான ஜே. எம். பாஸித் தலைமையில் அண்மையில் (19) தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் மிக பிரம்பாண்டமாக நடைபெற்றது.



இவ்விழாவில் அழகு கலை மற்றும் சரும பராமரிப்பாளருக்கான விருதினை எம்.எஸ்.பாத்திமா நப்ரா பெற்றுக் கொண்டார். இவர் அழகு சாதன பொருட்களை ஒவ்வொரு பெண்களின் சருமத்திற்கு ஏற்ற வகையில் முற்றிலும் இயற்கையாக தயாரித்து வழங்குவதற்காக இவருக்கு இவ்விருது வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இலக்கிய புரவலர் ஹாஷிம் உமர் பிரதம அதிதியாக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

### வாக்களிக்கப்பட்ட சுவனபதி

"நீங்கள் உங்கள் இறைவனைப் பற்றி எண்ணிய உங்களுடைய இந்த (தவறான) எண்ணம் தான் உங்களை அழித்துவிட்டது. ஆதலால் நீங்கள் நஷ்டமடைந்தவர்களாகிவிட்டீர்கள். (என்று அவை கூறும்)" (41:23)

"(எனினும்) நிச்சயமாக எவர்கள் "எங்கள் இறைவன் அல்லாஹ்தான்" என்று கூறி (அதன்மீது) உறுதியாக நிலைத்தும் இருந்தார்களோ அவர்களிடம், நிச்சயமாக மலக்குகள் வந்து அவர்களை நோக்கி) நீங்கள் (ஒன்றுக்கும்) பயப்படாதீர்கள். கவலைப்படாதீர்கள். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவனபதியைக் கொண்டு சந்தோஷ மடையுங்கள்." (41:30)

### நன்மைகள் யாவும் அழியும் நிலை

(நபியே) உமக்கும் உமக்கு முன்னிருந்த ஒவ்வொரு (தூது)வருக்கும் மெய்யாகவே வஹீ மூலம் அறிவிக்கப் பெற்றது (என்னவென்றால் இறைவனுக்கு) நீங்கள் இணைவைத்தல் உங்களுடைய நன்மைகள் (யாவும்) அழிந்து, நிச்சயமாக நீங்கள் நஷ்டமடைந்தவர்கள் ஆகிவிடுவீர்கள் (என்பதாகும்). ஆகவே நீர் அல்லாஹ்வையே வணங்கும் அவனுக்கு நன்றி செலுத்துபவர்களில் நீரும் இருந்து வாரும்"" (39:65,66)

"ஒவ்வொரு மனிதனும் அவன் செய்ததற்குரிய கூலியைப் பூரணமாகவே அடைவான். (அல்லாஹ்வாகிய) அவனோ அவர்கள் செய்பவைகளை நன்கறிந்தவனாக இருக்கின்றான்."" (39:70)

### கணக்கின்றிப் பெற வழி

"தீங்கு செய்யும் எவனுக்கும் அதைப் போன்றதே அன்றி (அதற்கதிகமாய்) அனுக்கு கூலியாகக் கொடுக்கப்பட மாட்டாது. அன்றி நற்கருமங்களைச் செய்யும் எவரும் உண்மை விசுவாசியாக இருந்தால் ஆணாயினும், பெண்ணாயினும் நிச்சயமாக சுவனபதியில் நுழைந்து விடுவார்கள். அதில் (கேட்பதெல்லாம்) கணக்கின்றியே கொடுக்கப்படுவார்கள்."
(40:40)

### பிரார்த்தனைகளுக்கு பதில்

"உங்கிறைவன் கூறுகின்றான் நீங்கள் (உங்களுக்கு வேண்டியவை யாவையையும் கேட்க) என்னையே அழையுங்கள். நான் உங்களுடைய பிரார்த்தனைகளுக்குப் பதிலளிப்பேன். எவர்கள் என்னை வணங்காது பெருமையடிக்கின்றனரோ அவர்கள் நிச்சயமாகச் சிறுமைப்பட்டவர்களாக நரகம் புகுவார்கள்" (40:60)

"அவனே நித்திய ஜீவன் அவனைத் தவிர வேறொரு நாயன் இல்லை. ஆகவே (மனிதர்களே) நீங்கள் முற்றிலும் தூய மனதுடன் அவனை அழைப்பீர்களாக. (ஏனெனில்) வழிபாடு அவனுக்கே உரியது. (சகல) உலகங்களையும் படைத்துப் போஷித்துப் பரிபக்குவப்படுத்தும் அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் உரித்தானது"" (40:65)

### மேலானதும் நிலையானதும்!

"(இங்கு) உங்களுக்கு கொடுக்கப்பட்டிருப்பதெல்லாம் (நிலையற்ற) இவ்வுலக வாழ்க்கைக்குரிய (அற்ப) இன்பங்களே. விசுவாசம் கொண்டு முற்றிலும் தங்கள் இறைவனையே நம்பி இருப்போருக்கு அல்லாஹ்விடத்தில் உள்ளதோ மிக்க மேலானதும் நிலையானதுமாகும்" (42:36)


"(அல்லாஹ்வை நம்பிய) அவர்கள் பெரும் பாவமான காரியங்களையும், மானக் கேடான விஷயங்களையும் விட்டு விலகி (இருப்பதுடன்) தங்களுக்கு கோபமூட்டப்பட்ட சமயத்திலும் (கோபமூட்டியவரை மன்னித்துவிடுவார்கள்" (42:37)

### கலந்தாலோசனை!

"தவிர அவர்கள் தங்கள் இறைவனின் கட்டளைகளை அங்கீகரித்து தொழுகையையும் கடைப்பிடித்து ஒழுகுவார்கள். அவர்களுடைய ஒவ்வொரு காரியத்தையும் தங்களுக்குள் கலந்தாலோசிப்பார்கள். நாம் அவர்களுக்கு அளித்தவைகளிலிருந்து (தானமாக செலவு செய்வார்கள்."
(42:38)

### அல்லாஹ்வின் மீது கடமை

"தீமைக்கு கூலியாக அதைப்போன்ற தீமையையே செய்வார்கள். அதற்கு அதிகமாகவல்ல. ஆனால் எவரேனும் (பிறரின் அக்கிரமத்தை) மன்னித்து (அவருடன்) சமாதானம் செய்து கொண்டால் அவருடைய கூலி அல்லாஹ்வின் மீது (கடமையாக) இருக்கிறது. நிச்சயமாக அவன் (இதற்கு மாறாக) வரம்பு மீறுவோர்களை நேசிப்பதில்லை." (42:40)




# கனடா - இந்தியா உறவில் விரிசல்...





எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

அண்மையில் சில மாதங்களாகவே இந்தியா மற்றும் கனடா இடையேயான மோதல் அதிகரித்து வரும் நிலையில் சர்வதேச நாடுகள் இதனைத் உன்னிப்பாக கவனித்து வருகின்றது என்பது தான் உண்மை. காலிஸ்தான் ஆதரவு தலைவர் படுகொலைக்கு இந்திய முகவர்கள் காரணம் என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம்சாட்டும் நிலையில், இந்தக் குற்றச்சாட்டுகள் அபத்தமானவை என்றும் அரசியல் நோக்கம் கொண்டவை என்றும் இந்தியா நிராகரித்துள்ளது. சில மாதங்களுக்கு முன் காலிஸ்தான் ஆதரவு நபர் கனடாவில் வைத்து கொள்ளப்பட்ட நிலையில் தற்போது வரை இந்த முறுகல் தொடருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும், உயர்மட்ட அளவிலான மோதல்கள் இருந்தாலும், தங்கள் அன்றாட வாழ்க்கையில் உடனடி தாக்கத்தை உணரவில்லை என, கனடாவில் வசிக்கும் இந்தியர்கள் கூறுகின்றனர். அதாவது நாங்கள் எப்போதும் போலவே இங்கு வாழ்ந்து வருவதாக அவர்கள் கூறினார்கள். அதேநேரத்தில் உயர் கல்வியைத் தொடரும் மாணவர்களில் இருந்து திறன் மிக்க தொழிலாளர்கள் வரை, பெரும்பாலானவர்கள் இந்த நெருக்கடியை இரு அரசுகளுக்கு இடையிலான ஒரு விஷயமாகவே பார்க்கிறார்கள். அதாவது தொழில் மற்றும் கல்வி நிமித்தம் அங்கு புலம் பெயர்ந்த இந்திய சமூகம் ”கனடாவில் சில நிச்சயமற்ற தன்மை உள்ளதை மறைக்கவில்லை மாறாக ஒப்புக் கொள்கிறார்கள் என்பதே உண்மையாகும்., ஆனால் நாங்கள் எந்தப் பிரச்னையையும் எதிர்கொள்ளவில்லை” என்று இந்திய சமூகம் தொடர்ந்து கூறி வருகின்றனர்.

கனடாவின் தொழிலாளர் மற்றும் குடியேற்ற தேவைகளில் இந்தியா முக்கியப் பங்கு வகிக்கிறது. இரு நாடுகளும் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் நெருக்கமாக இருப்பதால் நீண்டகால பதற்றம் நிலவ வாய்ப்பில்லை என்று குடியேற்ற நிபுணர்கள் நம்புகின்றனர்.

கனடாவின் தொழிலாளர் மற்றும் குடியேற்ற தேவைகளில் இந்தியா முக்கியப் பங்கு வகிக்கிறது. இரு நாடுகளும் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் நெருக்கமாக இருப்பதால் நீண்டகால பதற்றம் நிலவ வாய்ப்பில்லை என்று குடியேற்ற நிபுணர்கள் நம்புகின்றனர். இந்தியா வழிச் சமூகம் கனடாவில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மிகப் பெரிய அளவில் ஆன பங்கினை வகிப்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக உள்ளது.

ஆனால், ஒரு நிச்சயமற்ற தன்மை குறித்த பயம் எழுந்திருப்பதாகவும் நிரந்தரக் குடியுரிமை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கனடா வந்த நிறைய இந்தியர்களிடம் அடுத்து என்ன நடக்கப் போகிறது என்ற பயம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அரசியல் ரீதியான இரண்டு நாட்டின் தலைவர்கள் முரண்பாடு கொள்ளும் நிலையில் அரசின் கொள்கை திட்டங்கள் மாறுவது எல்லா நாடுகளிலும் ஏற்படுவதுண்டு. அதே போல் ஒரு நிலையை தான் கனடா மற்றும் இந்திய அரசுகளுக்கு இணையான மோதலாக தற்போது வெடித்துள்ளது என்பதை நாம் முதலில் தெளிவாக உள்வாங்கி கொள்ள வேண்டும்.

தூதரக ரீதியிலான சர்ச்சையைத் தொடர்ந்து இந்தியாவுக்கான கனடா தூதர் உட்பட தூதரக அதிகாரிகளை இந்தியா திரும்ப அழைத்துக் கொண்டது முக்கியமான நகர்வாகப் பார்க்கப்படுகிறது.இந்த உடனடியான பிரச்னைக்கு காரணம், காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர்களில் ஒருவரான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் என்பவர் கொல்லப்பட்டது குறித்து கனடாவில் தொடர்ந்து வரும் விசாரணை. அதனைத் தொடர்ந்து டெல்லியில் உள்ள கனடா தூதரக அதிகாரிகள் நீக்கம் ஆகியவையாகும்.ட்ரூடோ நிர்வாகம், இந்திய தூதரக அதிகாரிகள் குற்றத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்று விசாரணையில் தெரியவந்திருப்பதாக கூறுகிறது. இந்த சூழல்தான் இந்தியா-கனடா உறவு இதுவரை இல்லாத அளவுக்கு ஒரு பின்னடவை உண்டாக்கி இருக்கிறது. வரும் ஆண்டுகளில் இருநாடுகளுக்கு இடையேயான தூதரக உறவுகள் மோசமடையக்கூடும் என்பதையும் சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது.

இந்திய பிரிவினைவாதியான பஞ்சாப் மாநிலத்தின் சீக்கிய தனிநாடு காலிஸ்தான் இயக்கத்தின் முகமாக பார்க்கப்படும் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருக்கலாம் என்ற கனடாவின் குற்றச்சாட்டுதான் இந்த பிரச்னையின் மையமாகும். எனினும், இந்த குற்றச்சாட்டை இந்தியா தொடர்ந்து மறுத்து வருகிறது. கனடா தாம் கூறும் குற்றசாட்டுக்கு வலுவான ஆதாரங்களை இன்னும் கொடுக்கவில்லை என்று இந்தியா கூறுகிறது. அது போன்ற ஆதாரம் இருக்கும் பட்சத்தில் தூ தரக மட்டத்திலான தொடர்புகள் மூலம் இந்தியாவிடம் பகிரப்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்துகிறது. குறிப்பாக கனடாவின் உள்நாட்டு அரசியல் சிக்கலாக இருக்கும் சூழலில் அதற்கு மாறாக பொது வெளியில் கனடா, இந்தியா மீது குற்றம் சாட்டியது கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் நோக்கத்தை கேள்விக்கு நிலைத்திருக்க தொடர்ந்து போராடி வருகிறது. அவரது அரசு இப்போது நாடாளுமன்றத்தில் 150 இடங்களுக்கும் அதிகமான எண்ணிக்கையைக் கொண்டுள்ளது. பியர் போய்லிவெரே தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சி அவருக்கு சவாலாக திகழ்கிறது. 2025ஆம் ஆண்டு கனடாவில் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் கருத்து கணிப்புகளில் லிபரல் கட்சியை விடவும் கன்சர்வேட்டிவ் கட்சி முன்னணியில் இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனால் ட்ரூடோ தமது அரசியல் நிலைப்பாட்டை வலுப்படுத்த வேண்டிய அழுத்தத்தில் உள்ளார்.

ஜஸ்டின் ட்ரூடோவின் புகழ் மங்கத் தொடங்கியதற்கு மூன்று விஷயங்கள் காரணமாக இருக்கின்றன என்று இந்திய அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். குறிப்பாக குடியேற்றங்கள், ஆட்சிக்கு எதிரான அலை, அடையாளம் மற்றும் பணவீக்கம் ஆகியவை காரணமாக அவரது ஆட்சி செல்வாக்கை இழந்து வருகிறது. பணவீக்கம் அதிகரித்து வருவது அவரது அரசின் மீதான பொருளாதார நம்பகத்தன்மையை மிகவும் மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தை (உயஎயடநைச யவவவைரனந) என்று இந்தியா தற்போது கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இந்திய மத்திய வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ”இன்று நாங்கள் கேள்விபட்டவை எல்லாம் நாங்கள் தொடர்ந்து பேசி வந்ததை உறுதிப்படுத்துவதாகவே இருக்கிறது. இந்தியா மற்றும் இந்திய தூதர்களுக்கு எதிராக தான் வைத்த கடுமையான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் எந்த ஆதாரத்தையும் கனடா எங்களிடம் (இந்தியாவிடம்) அளிக்கவில்லை. இந்தியா – கனடா இடையேயான உறவுகளின் இந்த ஏற்றுக்கொள்ளமுடியாத (உயஎயடநைச யவவவைரனந) நடத்தை ஏற்படுத்திய சேதத்துக்கு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மட்டுமே பொறுப்பு” என்று தெரிவித்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி அரசினை விமர்சிப்பவர்களை கனாடவில் மவுனமாக்கும் செயல்களில் இந்திய அரசின் தொடர்பு இருக்கிறது என்று உள்ளூர் அரசியல் கருத்தியல்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விரும்புகிறார் என இந்திய ஆதரவு கருத்தாளர்கள் கருதுகின்றனர்.

இதன் காரணமாக லிபரல் கட்சி இந்தியாவுடனான உறவை அபாயத்துக்கு உள்ளாக்குவது மட்டுமின்றி, இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் முக்கியமான கூட்டாண்மையின் நட்புணர்வில் அபாயத்தையும் முன்னெடுப்பதாக இருக்கிறது.இந்திய இறையாண்மையின் மீது நேரடி தாக்குதல் என்று இந்தியா கருதுகிறது.

இறையாண்மை எனும் விஷயம் இந்த சிக்கலின் மையமாக இருக்கிறது. உலகின் சக்தியாக வளர்ந்து வரும் இந்தியா உலக அரங்கில் பெரும் பங்கு வகிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இருந்து வரும் நிலையில், அதன் உள்நாட்டு விவகாரங்களில், குறிப்பாக பிரிவினைவாதத்தில் எந்த ஒரு வெளிநாட்டின் தலையீடையும் விரும்பவில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை, கனடாவில் காலிஸ்தான் பிரிவினைவாதம் முன்னெடுக்கப்படுவது இந்தியாவின் இறையாண்மையின் மீது நடத்தப்பட்ட தாக்குதலாகவே கருதப்படுகிறது. நிஜ்ஜார் கொலை தொடர்பான விஷயத்தில் மட்டுமின்றி, இந்தியாவின் உள்நாட்டு ஒற்றுமையை சீர்குலைக்கும் யார் ஒருவருக்கும் எந்த ஒரு நாடும், எந்த ஒரு தொலைவில் இருந்தபோதிலும், ஆதரவு அளிக்கக் கூடாது என்ற தெளிவான செய்தியையே இந்தியா மீண்டும் சொல்கிறது.காலிஸ்தான் அமைப்பினரை கனடா சுதந்திரமாக உலவ விடுவது, சர்வதேச அரங்கில் அதன் நிலையை சமரசத்துக்கு உள்ளாக்குவதாகும். இந்தியாவுடனான உறவில் சீர்குலைவு என்பது நீண்டகாலத்துக்கு விளைவுகளை ஏற்படுத்தும் காரணியைக் கொண்டதாகும். குறிப்பாக கனடா சிக்கலான சர்வதேச சூழலில் இந்த கடினமான நிலையை ...ளிக்க வேண்டிய தேவை

உள்ளாக்குவதாக உள்ளது என்று இந்திய ஆதரவு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் பஞ்சாப்பில் பலதசாப்தங்களுக்கு முன்பு காலிஸ்தான் இயக்கத்தின் தாக்கம் குறைந்து வந்த நிலையிலும், கனடாவின் அரசியல் வட்டாரத்தில் தொடர்ந்து உயிர்ப்புடனே இருக்கிறது. சீக்கிய சமூகத்தின் சில பிரிவினர் தொடர்ந்து பிரிவினைவாத நோக்கங்களை முன்னெடுத்து வருகின்றனர். இப்போது ஏன் இந்த விஷயம் பெரிதாக்கப்படுகிறது என்ற கேள்வி இதன் பின்னணியில் எழுகிறது. கனடாவின் உள்நாட்டு அரசியல் இதன் பின்னணியில் இருக்கிறது என்பதுதான் இதன் பதிலாக இருக்கக்கூடும். ட்ரூடோவின் லிபரல் அரசு, புதிய ஜனநாய கட்சியின் ஆதரவை சார்ந்தே இருக்கிறது. இது ஜக்மீத் சிங் தலைமையிலான அரசியல் கட்சியாகும். இவர் காலிஸ்தான் அமைப்பின் ஆதரவாளர் ஆவார். இந்த விஷயத்தில் இந்தியாவுக்கு எதிராக அவர் குரல் கொடுத்து வருகிறார். ட்ரூடோவின் அரசு, பதவியில் நீடித்திருக்க புதிய ஜனநாய கட்சியின் ஆதரவைப் பெறுவதற்காக இந்தியாவுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை அவர் எடுத்திருக்கிறார் என்று எண்ணத் தோன்றுகிறது. இந்திய வம்சாவளி சீக்கியர்களுக்கு ஆதாரவாக எடுக்கப்பட்ட நிலை தான் அதுவாகும். தற்போதைய தூதரக சிக்கல்களை புரிந்து கொள்ள, கனடாவின் அரசியலை அவசியம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜஸ்டின் ட்ரூடோவின் லிபரல் கட்சி, 2015ஆம் ஆண்டில் இருந்து ஆட்சியில் இருந்து வந்து வந்த போதிலும், ஆட்சியில் பாதித்திருக்கிறது. விதிமுறைகளுக்கு உட்படுத்தப்படாத குடியேற்றங்கள் கனடாவின் மாற்றமடையும் மக்கள் தொகை எண்ணிக்கையில் கவலைகளை ஏற்படுத்தியுள்ளது. ஒரு காலத்தில் கனடா குடியேற்ற கொள்கையில் திறந்த மனதோடு கூடியதாக இருந்தது. இப்போதைய அரசியல் சூழலில் இது நீண்டகாலத்துக்கு நீடித்திருக்காது. இந்த உள்ளூர் சிக்கலை திசை திருப்புவதற்காக சர்வதேச சர்ச்சைகளை கையில் எடுத்திருக்கும் ஜஸ்டின் ட்ரூடோவின் முயற்சியானது, அவரது அரசியல் வாழ்க்கையை தக்கவைத்துக் கொள்ளும் வகையிலானதாக இருக்கலாம் என்று கருத்துக்களை இந்திய ஆதரவு ஊடகங்கள் பகிர்ந்து வருகின்றனர்..

கனடா காலிஸ்தான் இயக்கத்தின் தளமாக கனடா நீண்டகாலமாக இருந்து வருகிறது. இந்தியாவின் புலம்பெயர்ந்த சீக்கியர்கள் குறிப்பிடத்தக்க அரசியல் ஆதிக்கத்தை செலுத்தி வருகின்றனர். இந்த தாக்கமானது, பிரிவினைவாத நோக்கங்களுக்கு அங்கீகாரத்தை முன்னெடுத்தல், அரசியல் பிரநிதித்துவத்தை அடைதல், கனடாவின் சமூகத்தில் தங்களை நிலை நிறுத்திக் கொள்ளுதல் ஆகியவற்றை கொண்டிருப்பதாக உள்ளது என்று இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

இதற்கிடையில் பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கூறியதற்கான ஆதாரம் இல்லை என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ திடீரென பல்டி அடித்த நிலையில், இது கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம்சாட்டியிருந்தார். இந்நிலையில், இது தொடர்பான ஆணையத்தின் முன்பு ஆஜராகி விளக்கம் அளித்த கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங், கனடா மண்ணில் கொல்லப்பட்டதில் இந்தியாவின் தொடர்பு குறித்து தனது அரசின் உளவுத்துறை மூலம் கிடைத்த ஊகங்களைத் தவிர ஆதராங்களை வழங்கவில்லை என்று ஒப்புக்கொண்டார்.

முன்னதாக, இந்த விவகாரம் குறித்து விசாரிக்குமாறு இந்தியாவை கனடா கேட்டுக்கொண்ட போது, அதற்கான ஆதாரங்களை இந்தியா கேட்டது. அந்த நேரத்தில் அது உளவுத்துறையின் முதன்மை ஊகம் மட்டுமே, அதற்கான வலுவான ஆதாரங்கள் இல்லை என்று கூறியிருந்தார்.

காலிஸ்தான் விவகாரம் கடந்தகால யுகத்தின் தொடர்ச்சி என்பது ஒரு முரணாக இருக்கலாம். பஞ்சாப்பில் உள்ள இளம் சீக்கியர்களுக்கு இது பெரும்பாலும் தொடர்பில்லாததாக இருக்கலாம். அதில் இருந்து அவர்கள் நகர்ந்து விட்டனர். எனினும், கனடாவில் இந்த விவகாரம் உயிர்ப்புடன் வைக்கப்பட்டிருக்கிறது. ஜக்மீத் சிங் போன்ற அரசியல்வாதிகள் புலம்பெயர்ந்த சீக்கியர்களின் ஓட்டுகளை பெறுவதற்காக இந்த விஷயத்தை பெரிதுபடுத்துகின்றனர் என்று இந்தியா கருதுகின்றது.

அதே நேரத்தில் ஜஸ்டின் ட்ரூடோ அரசு இதன் தீவிரத்தை உணர்ந்தே இருக்கிறது. எனவே, இந்தியாவுடனான உறவை ஆக்கபூர்வமாக முன்னெடுப்பதை விடவும் இருக்கிறது. நாட்டின் வெளியுறவு கொள்கையை வடிவமைப்பதில் உள்ளூர் அரசியல் முக்கிய பங்கு வகிக்கும் போது, கனடா இதை ஒரு புதிய உச்சநிலைக்கு கொண்டு சென்றுள்ளது.ட்ரூடோவின் நடவடிக்கைகள் தூதரக உறவில் தீவிரமான பிளவை ஏற்படுத்துவதை முன்னோக்கியதாக உள்ளது. இந்தியா-கனடா இடையேயான வர்த்தக பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் ஒத்துழைப்புக்கான வாய்ப்பு என்பது குறைவாகவே உள்ளது. கனடாவின் தவறான கண்ணோட்டம் சர்வதேச தெற்கு பிராந்தியம், இந்தோ-பசிபிக் பிராந்தியம் ஆகியவற்றில் முக்கியமான நாடாக இருக்கும் இந்தியாவை கோபப்படுத்துகிறது. இது சரி செய்யமுடியாத பாதிப்பை நோக்கி இட்டுச் செல்லலாம்.சீனாவுடனான அதன் உறவு ஏற்கனவே சிக்கலாக உள்ளது. இதையெல்லாம் பார்க்கும் போது கனடா ஆசிய உறவை இழக்க நேரிடலாம்.ட்ரூடோ 2025ஆம் ஆண்டு தேர்தலை எதிர்கொள்கிறார். அதில் அவர் வெற்றி பெறுகிறார் அல்லது தோற்கிறார் என்பது கேள்வி அல்ல. தீவிரவாதத்தை கைகழுவி விட்டு மீண்டு வருவாரா என்பதில் என்னவிதமான மரபை தமக்கு பின்னால் விட்டு செல்ல உள்ளார் என்பதில்தான் கேள்வி அடங்கி இருக்கிறது. இந்தியா-கனடா இடையேயான உறவின் மோசமான நிலையை சீர் செய்வது சிக்கலான ஒன்றாக இருக்கும். பல ஆண்டுகளாக வேகமாக கட்டமைக்கப்பட்ட இது இப்போது தரைதட்டி நிற்கிறது.

# சமூகம் எதிர்கொண்ட பிரச்சினைகளின் போது துணிச்சலுடன் களமிறங்கினோம்: கண்டி மாவட்டத்திற்கு எதுவுமே செய்யவில்லை என்பதும் அபாண்டம்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் விளக்கம்



கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளின் போது துணிச்சலாக களம் இறங்கி எதிர்த்து நின்று, சமூகத்தைப் பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார்.

கண்டி, இனிகலையில் (22) நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரத்தில் உரையாற்றும் போது அவர் இதனைக் கூறினார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது, முன்னாள் அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் இந்த மாவட்டத்தில் நாற்பது வருடங்களாக அரசியல் செய்தவர். 1994 இல் தேசியப் பட்டியலில் பாராளுமன்றத்திற்கு நான் தெரிவு செய்யப்பட்ட பின்னர், 2000 ஆம் ஆண்டு முதன்முதலாக கண்டி மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்டபோது, துரதிர்ஷ்டவசமாக அதற்கு முந்திய வருடம் அவர் காலம் சென்றிருந்தார்.

2000ஆம் ஆண்டில் நான் கண்டி மாவட்டத்தில் மரச் சின்னத்தில் போட்டியிட்டபோது நான் வெற்றிபெறுவேன் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

இறைவனின் உதவியால் அந்தத் தேர்தலில் நான் வெற்றிபெற்ற போதும் எங்கள் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் ஹெலிகொப்டரில் பயணித்துக் கொண்டிருந்தபோது மரணிக்க நேர்ந்தது. அந்த பெரும் தலைவர்கள் இருவரும் இரண்டு வருடங்களுக்குள் மரணித்தமை பெரும் மனப்பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

நான் 30 வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றேன். இந்த 30 வருடங்களில் நான் கண்டி மாவட்டத்திற்கு எதையுமே செய்யவில்லை என்று சிலர் பொய்யாக குற்றம் சாட்டுகின்றனர். நான் செய்த வேலைகளை குறிப்பிடுவதாக இருந்தால் பெரிய பட்டியல் ஒன்றே போடலாம். அதில் ஒன்றை மட்டும் குறிப்பிடுவதாக இருந்தால், நீர்வழங்கல் அமைச்சராக நான் இருந்தபோது, 52 ஆயிரம் மில்லியன் ரூபா சீனாவிடம் இருந்து கடன் பெற்று ஆரம்பிக்கப்பட்டு அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கொண்டு திறந்துவைத்த குஹாகொடை நீர்சுத்திகரிப்பு நிலையத்தைக் குறிப்பிடலாம். இது அக்குறணைக்கும் அப்பால் அங்கும்புறை வரை குடிநீர் வழங்கும் ஆற்றலைக் கொண்டது.

அதேபோன்று, கண்டி மாவட்டத்தில் நான் 16 நீர்வழங்கல் திட்டங்களைச் செய்திருக்கின்றேன்.


கண்டி நகரத்துக்கான கழிவு நீர் செயல் திட்டத்தை கொரிய அரசாங்கத்தின் உதவியுடன், இருபதினாயிரம் மில்லியன் செலவில் அறிமுகப்படுத்தினோம். பாதைகள் தோறும் அதற்கான குழாய்கள் பதிக்கப்பட்டு அது முன்னெடுக்கப்பட்டது. முழு நகரத்தின் கழிவு நீரையும் சுத்திகரிப்பதற்கான நிலையம் ஒன்றையும் அமைத்துள்ளோம். நன்றாக சுத்தீகரித்து அங்கிருந்து வெளியேற்றப் படும் நீர் ஆறுகளில் கலக்க விடப்படுகின்றது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்ததால் அபிவிருத்தி விடயங்களில் எங்களால் பாரிய செயற்திட்டங்களை முன்னெடுக்க முடியவில்லை. கொரோனா -கொவிட்-19 பெருந் தொற்று பரவியது. அக்காலப் பகுதியில் அக்குறணை இரண்டு மாதங்களுக்கு முற்றாக தனிமைப்படுத்தப்பட்டது. யாரும் உள்ளே செல்லவோ, வெளியே வரவோ முடியாதிருந்தது. அது வேண்டுமென்றே சமூகத்தைப் பழிவாங்குவதற்காக செய்யப்பட்டது. அவ்வாறான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மணிக்கணக்கில் அவற்றுக்கு எதிராக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்துள்ளேன் முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான அநீதிகளை அரசாங்கத்திடம் துணிச்சலுடன் சுட்டிக் காட்டியுள்ளேன். இவற்றை எல்லாம் நான்தான் செய்தேன் என்று தம்பட்டம் அடித்துக் கொள்ள விரும்பவில்லை.

கடந்த காலங்களில் சமூகத்திற்காக பாராளுமன்றத்தில் நான் குரல் கொடுக்கவில்லை என்று யாரேனும் கூறினால், எதிர்வரும் நவம்பர் 9 ஆம் திகதி அதற்கான பதில் கிடைக்கும். எனது பாராளுமன்ற உரைகளைத் தொகுத்து, அவற்றை அன்றைய தினம் ஐந்து பாகங்களைக் கொண்ட நூல்களாக கண்டியில் வெளியிடவுள்ளேன். நமது கண்டி மாவட்டத்தில் சமூகத்தின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காக எங்களுக்கு வாக்களிப்பீர்கள் என்று நாங்கள் நம்புகின்றோம் என்றார்.

# கொழும்பில் அனுஷ்டிக்கப்பட்ட காஷ்மீர் கறுப்பு தின நிகழ்வு







(ஏ.எஸ்.எம். ஜாவித்)

ஒக்டோபர் 27 காஸ்மீர் கரிநாள் தினம் நேற்று (27) இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் காரியாலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வில் அரசியல் செயற்பாட்டாளரும் முஸ்லிம் விவகார தேசிய ஒருங்கிணைப்பாளருமான ஷிராஸ் யூனுஸ் 1947 ஆம் ஆண்டு ஜம்மு காஷ்மீர் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டு ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளின் கைகளில் அப்பாவி காஷ்மீரிகள் மனிதாபிமான மற்ற முறையில் நடத்தப்படுவதையும், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் நடந்த இந்திய அட்டூழியங்களையும் சுட்டிக்காட்டி உரையாற்றினார்.

1947 ஆம் ஆண்டு ஒக்டோபர் 27 ஆம் திகதி, சட்டவிரோதமான முறையில் காஷ்மீர் பள்ளத்தாக்கை இந்தியா ஆக்கிரமித்தது. அப்போதிலிருந்து, இந்திய சட்ட விரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட ஜம்மு மற்றும் காஷ்மீரானது உலகத்தின் மிகப்பெரிய சிறைச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. காஷ்மீர் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலின் சிறப்பு அமர்வுகள் குறித்து பேசிய பேச்சாளர், இந்திய அட்டூழியங்களுக்கு சர்வதேச சமூகம் இனி ஒருபோதும் அமைதியாக இருக்காது என்றும் குறிப்பிட்டனர்.

பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர், மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) ஃபஹீம் உல் அஸீஸ் கருத்துத் தெரிவிக்கையில், பங்கேற்பாளர்களுக்கு நன்றி தெரிவித்ததோடு, ஜம்மு மற்றும் காஷ்மீரில் பல தசாப்தங்களாக இந்திய சட்டவிரோத ஆக்கிரமிப்புக்கு எதிரான நியாயமான போராட்டத்திற்காக ஜம்மு மற்றும் காஷ்மீர் மக்களுக்கு மரியாதை செலுத்தியதோடு காஷ்மீரிகளின் சுயநிர்ணய உரிமைக்கு பாகிஸ்தானின் அரசியல் மற்றும் இராஜதந்திர ஆதரவினை மீண்டும் வலியுறுத்தினார்.

மேலும், கண்காட்சி மற்றும் கருத்தரங்கின் நோக்கத்தை விளக்கிய உயர் ஸ்தானிகர், பாகிஸ்தானும் அதன் மக்களும் நமது காஷ்மீரி சகோதர சகோதரிகளுடன் தங்கள் இதயங்களிலும் மனதிலும் ஒன்றுபட்டுள்ளனர் எனவும் காஷ்மீர் பிரச்சனைக்கான நிரந்தர தீர்வுக்காக நாங்கள் எப்போதும் துணை நிற்போம் என்றும் குறிப்பிட்டார்.

# சாய்ந்தமருதில் டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை





(இஸட்.ஏ.றஹ்மான்)

சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புரைக்கு அமைவாக டெங்கு நுளம்பு ஒழிப்பு மற்றும் குப்பைகள் கழிவகற்றும் நடவடிக்கை சாய்ந்தமருதில் பொதுச்சுகாதார வைத்தியதிகாரி ஜெ.மதன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்திலுள்ள கிராம சங்க அங்கத்தவர்கள், தலைவர்கள், செயலாளர்கள், கிராம சுகாதார தொண்டர்கள் ஆகியோர்களுக்கு டெங்கு ஒழிப்பு விடயங்கள் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு நடாத்தப்பட்டதுடன் வொலி வேரியன் கிராமத்து குடியிருப்பாளர் களுக்கு கழிவுகள் சேகரிக்கும் உறைகளும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களினால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வைத்தியதிகாரிகளான ஏ.எஸ். பௌசாட், ஆயு.அர்சாத் மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மேல் மாகாண புதிய ஆளுநர் தொழிலதிபர் ஹனீப் யூசுப் ஸொமாருக்கு சிறப்பு கௌரவிப்பு





(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

ஸ்ரீலங்கா மேமன் சங்கம் மற்றும் உலக மேமன் அமைப்பின் மேல்மாகாண ஆளுநரும் தொழிலதிபருமான ஹனீப் யூசுப் ஸொமாரை பாராட்டி கொரவிக்கும் சிறப்பு நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றது.மேமன் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் உயர் பதவியான தேசத்தின் ஆளுநர் பதவிக்கு முதல் தடவையாக நியமனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்ரீலங்கா மேமன் சங்கம் மற்றும் உலக மேமன் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆளுநருக்கான சிறப்பு வரேற்பு விழாவும் கௌரவிப்பு வைபவமும் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள மேமன் சங்கத்தின் வரவேற்பு நிலைய கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. ஜனாதிபதி அநுர குமார திசாநாயகவினால் மேல் மாகாணத்தின் பன்னிரெண்டாவது ஆளுநராக நியமனம் பெற்றுள்ள தொழிலதிபர் ஹனீப் யூஸ/ப் ஸொமார் மேமன் சமூகத்தைச் சேர்ந்த சிறுபான்மை மக்கள் சமூகப் பிரதிநிதியுமாவார். மேல் மாகாணத்தின் பன்னிரெண்டாவது ஆளுநரான இவர் மேமன் சமூகத்திலிருந்து ஆளுநராக உயர் பதவி அச்சமூகத்தின் முதலாவது பிரமுகர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேல் மாகாண ஆளுநருக்கான இந்த சிறப்பு பாராட்டு விழாவில் ஸ்ரீலங்கா மேமன் சங்கம் உலக மேமன் அமைப்பின் பெருமளவிலான பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.இந்த நிகழ்வில் புரவலர் ஹாசிம் உமர், சமூக ஆர்வலர் சிராஸ் யூனூஸ் உள்ளிட்ட பிரமுகர்களால் ஆளுநர் பாராட்டப் பட்டுதுடன் பல்வேறு பிரமுகர்களாலும் சிறப்பு ஞாபகார்த்த சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# பொல்வத்தையில் மலேஷிய தூதுவரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட அஹதிய்யா பாடசாலை







(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

வெல்லம்பிட்டி பொல்வத்தை சித்தி பாத்திமா உவைஸ் நிலையத்தில் இளம் பெண்கள் முஸ்லிம் அமைப்பும் மஸ்ஜிதுன் நூர் ஜ/ம்ஆ பள்ளிவாசலும் இணைந்து பிரதேச மாணவர்களின் நலன்கருதி அஹதிய்யா பாடசாலை யொன்று (26) திறந்து வைக்கப்பட்டது.

இளம் மாதர் முஸ்லிம் அமைப்பின் தலைவி பவாஸா தாஹா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைக்கான மலேசியத் தூதுவர் பட்லி ஹிஸாம் ஆதம் மற்றும் அவரது பாரியார் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

சிறப்பு அதிதியாக அஹதிய்யா பாடசாலை நடத்துவதற்கான இடத்தை வழங்கியுள்ள பரோபகாரி திருமதி நூருல் இம்தியாஸ் உவைஸ் கலந்து கொண்டார். மேலும் கௌரவ அதிதிகளாக பேராசிரியர் ரஸீன் பாபு, சட்டத்தரணி அஸ்ரப் ஷரூமி, வை.எம்.எம்.ஏ தலைவர் அம்ஹர் சரீப், கொழும்பு டைம்ஸ் பிரதம ஆசிரியர் மொஹம்மட் ரசூல்தீன், காலித் பாறுக், பொரல்லை அஹதிய்யா பாடசாலை அதிபர் சிப்லி ஹாசிம், மஸ்ஜிதுன் நூர் ஜ/ம்ஆ பள்ளிவாசல் தலைவர் எம். உவைஸ் ஹாஜி உள்ளிட்ட முக்கியஸ்தகள் கலந்து கொண்டனர்.

பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த இலங்கைக்கான மலேசியத் தூதுவர் பட்லி ஹிஸாம் ஆதம் சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டி அஹதிய்யா பாடசாலையை திறந்து வைத்தார். இதன்போது பிரதம அதிதி உள்ளிட்ட முக்கியஸ்தர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டதுடன் அஹதிய்யா பாடசாலை மாணவர்களுக்கு இலவச அப்பியாசப் புத்தகங்களும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலியர்களுக்கு அச்சுறுத்தல் சோடிக்கப்பட்ட கதையா?

## மிகைக்கும் சந்தேகம்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

இலங்கையில் வசிக்கும் இஸ்ரேவேலர்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற வெளிநாட்டு புலனாய்வு தகவல் காரணமாக இலங்கையில் வசித்து வரும் இஸ்ரேலியர்களை பாதுகாக்க விரைவாக நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா பணிப்புரை விடுத்துள்ளார். அதன்படி இஸ்ரவேலர்களின் நடமாட்டம் இருக்கின்ற பகுதிகளின் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருக்கின்றது. இஸ்ரேலிய பிரசைகளது பாதுகாப்பை மாத்திரமன்றி இலங்கையில் வசிக்கும் எல்லாப் பிரசைகளதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்த தகவல் கிடைத்ததும் அதுபற்றி விரிவாக புலனாய்வுகளை செய்ததாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காக 2024.10.24 ஆம் திகதி புத்தளத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசும் போது கூறினார். ஆனாலும் இத்தகைய தகவல் கிடைத்து 14 நாட்களின் பின்னரே அறிவிக்கப்பட்டிருப்பதால் அரசாங்கம் பாரதூ ரமான விடயத்தில் அசிரத்தையாக இருந்ததாக அரசியல் வட்டாரங்களில் இருந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இலங்கையில் பல பாகங்களில் உள்ளாசப் பிரயாணிகளாகவும் வேறு வகையிலும் வசித்து வரும் இஸ்ரேலியர்களுக்கு பாதுகாப்பு அச்சறுத்தல் இருப்பதாக அமெரிக்க மற்றும் மேலும் சில வெளிநாட்டு புலனாய்வு துறைகள் தகவல் வெளிப்படுத்தியதால் உள்நாட்டில் புதிய சர்ச்சை ஏற்பட்டு பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரிக்கப் பட்டிருக்கின்றது. இலங்கையில் இருக்கும் அமெரிக்க தூ தரகம் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அறுகம்பே உள்ளாசப் பிரயாண பகுதிக்கு அமெரிக்க பிரசைகளை விஜயம் செய்ய வேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கும் வகையிலான சிவப்பு அறிவித்தலை செய்திரு க்கின்றது. அத்துடன் அவுஸ்திரேலியா, சோவியத் ருஷ்யா மற்றும் நியுசிலாந்து ஆகிய நாடுகளின் தூதரகங்களும் அந்நாட்டு பிரசைகளுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் அறிவித்தலை செய்து எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவித்தி ருக்கின்றது. ஆனாலும் பிரயாணத் தடை எதனையும் விதிக்கவில்லை.

பொதுத் தேர்தலுக்கான நாள் குறிக்கப்பட்டு இன்னும் எஞ்சி இருப்பது 16 நாட்கள் மாத்திரமாகும். அதற்கான தேர்தல் பிரச்சார பணிகள் மும்மரமாக முன்னெடுக் கப்படுகின்ற சூழ்நிலையில் இவ்வாறான ஒரு பாதுகாப்பு அச்சுறுத்தல் பற்றி வெளியாகி இருக்கின்ற அறிவித்தலால் முழு நாடும் விழிப்படைந்து உசாராகி இருக்கின்றது. இந்த தகவலை ஒருசாரார் நம்ப மறுத்து வருகின்றனர். இந்த அறிவிப்பானது மூன்று வெளிநாட்டு புலனாய்வு பிரிவுகள் மூலம் வந்திருப்பதால் இரு ஒரு தேர்தல் கால வாக்கு வேட்டை தந்திரோபாயமாக இருக்கலாம் என்று கருதுகின்றனர். அல்லது மீண்டும் இஸ்லாமிய பயங்கரவாத அல்லது அடிப்படைவாத பீதியை ஏற்படுத்தும் திட்டமிட்ட சதி என்று சந்தேகிக்கப்படுகின்றது. இலங்கையில் வசிக்கும் இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்துவதாக இருந்தால் யார் அத்தகைய தாக்குதல் ஒன்றுக்கு திட்டமிட வேண்டும்? யாருக்கு அத்தகைய தாக்குதல் தேவை இருக்கின்றது? ஏன் இலங்கையில் வசிக்கும் இஸ்ரேலிய யூதர்கள் மீது தாக்குதல் நடத்தி கொலை மிரட்டல் விடுக்க வேண்டும் என்ற கேள்விகள் எழுகின்றன.

தற்செயலாகவாவது அவ்வாறான ஒரு தாக்குதல் நடத்தப்படுமானால் அது நிச்சயமாக முஸ்லிம் தரப்பில் இருந்துதான் நடத்தப்பட வேண்டும். அப்படியாயின் அவ்வாறு தாக்குதல் நடத்துபவர்கள் இஸ்லாமிய பயங்கரவாதிகளாக, தீவிரவா திகளாக அல்லது வெளிநாடுகளில் இருந்து இயங்கும் ஐ.எஸ்.எஸ். ஆதரவு தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புடையவர்களால் நடத்தப்பட வேண்டும். தவிர வேறு எந்த அமைப்புக்களாலும் அதற்கான சாத்தியங்கள் இல்லை. இந்த தாக்குதலை திட்டமிட்டவர்கள் யார் என்று இலங்கை மக்களுக்கு வெளிப்ப டுத்தப்பட வேண்டும்.

ஏற்கனவே 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிகளிலும் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோதாபய ராஜபக்ஷ ஆகியோர் ஜனாதிபதி தேர்தல்களிலும் பொதுத் தேர்தல்களிலும் போட்டியிட்ட போது தேர்தல் நெருங்கிய காலப்பகுதியில் பெரும்பான்மை சிங்களவர்களது வாக்குகளை தம் பக்கம் திசை திருப்பி ஆட்சியை கைப்பபற்ற கையாண்ட தந்திரோபாயமாக அமைந்தது இவ்வாறான இஸ்லாமிய பயங்கரவாத, ஐ.எஸ்.எஸ். ஏன்ற பீதியாகும். அத்துடன் முஸ்லிம் விரோத செயற்பாடுகள் கட்டவிழ்த்து விடப்பட்டமை, வெறுப்பு பேச்சுக்களை பரப்பி சிங்கள மக்களை உசுப்பேத்தியமை கடந்த கால வரலாறாக இருக்கின்றது.

அதனால் தற்போது வெளியாகி இருக்கின்ற இஸ்ரேலியர்கள் மீதான தாக்குதல் அச்சுறுத்தல் பற்றிய தகவல்களை அரசாங்கம் வெளிப்படுத்தியவுடன் மக்கள் அதனை நம்புவதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர். அதே நேரம் அரசாங்கமும் அவசரப்பட்டு கிடைத்த புலனாய்வு தகவல்களை வெளிப்படுத்தவில்லை. யார் இந்த தாக்குதலின் சூத்திரதாரிகள், பின்னணி என்ன என்ற விடயங்களையும் வெளியிட தயக்கம் காட்டி வருகின்றது. இந்த சம்பவத்துடன் தொடர்பு வைத்திருப்பதாக கருதப்படும் மூன்று பேரை சந்தேகத்தின் பேரில் புலனாய்வுத் துறை கைது செய்திருக்கின்றது. ஒருவர் சுண்ணாகம் பகுதியைச் சேர்ந்தவராவார். இன்னுமொருவர் மாவனல்லை பிரதேசத்தை சேர்ந்தவராவார். மற்றவர் கொழும்பு பிரதேசத்தை சேர்ந்தவர். ஆனாலும் மாவனல்லை பிரதேசத்தை சேர்ந்தவர் ஒரு மனநலக் குறைபாடு உடையர்வர் என்பதோடு அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனாலும் கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து இதுவரையில் அப்படியான தாக்குதல் திட்டம் பற்றிய உறுதிப்படுத்தத் தக்க தகவல்கள் வெளியாகவில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இத்தகைய தகவல் இந்திய புலனாய்வு துறையால் இலங்கைக்கு அறிவிக்கப்பட்டது என்ற செய்திகளில் எந்தவிதமான உண்மைகளும் இல்லை. அதே போன்று இந்த தாக்குதலை நடத்துவதற்காக இரண்டு நபர்களுக்கு தளா 50 இலட்சம் ரூபா வீதம் பணம் கொடுத்து அனுப்பப்பட்டிருப்ப தாகவும்க்கில் இருந்து வந்தவர், இதன் பின்ன ணியில் ஈரான் இருப்பதாகவும் சில சிங்கள ஊடகங்களும் சமூக ஊடகங்களும் தகவல் வெளியிட்டிருந்தன. அதுபற்றி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் 2024.10.24 ஆம் திகதி நடத்திய ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையில் அத்தகைய தகவல்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவையும் ஆதாரமற்ற தகவல்களாகும். அது குறித்து தகவல் வெளியிட்ட அனைத்து ஊடகங்களுக்கும் விளக்கங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார். அதுமட்டுமல்லாமல் இந்த விடயத்தில் அரசியல் நாடகம் ஆட வேண்டாம், இது பாரதூரமான விடயமாகும். மக்கள் மத்தியில் அச்சத்தையும் பீதியையும் தோற்று விக்கக்கூடி யதாகும் என்றும் எச்சரிக்கை விடுத்தார். அத்துடன் இந்த தாக்குதல் சதியில் அரசாங்கம்

தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...



## இஸ்ரேலியர்களுக்கு... (10ம் பக்கத் தொடர்ச்சி)

அவசரப்பட்டு முஸ்லிம் தரப்பு என்ற எந்தவிதமான தகவல்களையும் வெளிப்படுத்தவும் இல்லை.

எவ்வாறாயினும் தேர்தல் ஒன்று நெருங்கி வருகின்ற சூழ்நிலையில் அரசாங்கமே மக்கள் ஆதரவை தம் பக்கம் திருப்பிக் கொள்வதற்காக தருணம் பார்த்து இப்படியான ஒரு கதையை கட்டவிழ்த்து விட்டிருக்கின்றதா என்ற சந்தேகங்களும் எழுகின்றது. ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதியாக பதவியில் இருந்த கோதாபய ராஜபக்ஷ சிங்கள தீவிரவாதிகளை கைக்குள் போட்டுக்கொண்டு அப்போதைய சந்தர்ப்பத்தில் கையாண்ட தந்திரோபாயங்களும் இவ்வாறான இட்டுக்கட்டப்பட்ட கதைகளாகும். அத்துடன் 2019 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதலின் சூத்திரதாரிகள் யார் என்று இன்றுவரையில் ஊர்ஜிதம் செய்யப்படாத நிலையில் இன்னும் அவரது அப்போதைய அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்த முறையில் சந்தேகங்கள் நிலவி வருகின்றன.

அந்த தாக்குதல் அரசியல் தேவைக்காக திட்டமிட்டதாகும் என்பதே தொடரும் சந்தேகமாகும். அப்படியான ஒரு பின்னணியில் இந்த இஸ்ரேலியர்கள் மீதான தாக்குதல் எச்சரிக்கை தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டமையும் சந்தேகங்களை தோற்றுவித்திருக்கின்றது. இவை ஒருவிதமான சோடிக்கப்பட்ட கதைகளாக இருக்கலாம் அல்லது இஸரேலியர்கள் குறித்த அரச பாதுகாப்பை அதிகரிக்கச் செய்த மேற்கொண்ட ஒரு தந்திரோபாயமாகவும் இருக்கலாம்.

எவ்வாறாயினும் உலகம் முழுவதிலும் வசிக்கின்ற இஸ்ரேலியர்களுக்கு உயிராபத்து அச்சுறுத்தல் இருக்கின்றது என்ற விடயத்தில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. இஸ்ரேலியர்கள் எங்கு வாழ்ந்தாலும் ஏதோ ஒருவிதமான அச்சத்திலும் பதற்றத்திலும்தான் வாழ்கின்றனர் என்பது உண்மையாகும். ஆதற்கு வழிவகுத் துள்ள பிரதான காரணி 2023 ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி இஸ்ரேல் பாலஸ்தீனம் மீது ஆக்கிரமிப்பு செய்து வான் வழியாகவும் தரைமார்க்கமாகவும் மிக மோசமான கொடூரமான முறையில் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. குண்டுமழை பொழிந்து வருகின்றது. உத்தியோகபூர்வமான அறிக்கைகளின் படி இதுவரையில் இஸ்ரேல் நடத்திய ஏவுகனைத் தாக்குதல் மூலம் 70.000 பாலஸ்தீனியர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 11.000 குழந்தைகள் மற்றும் பெண்களும் அடங்குகின்றனர். அதே போன்று பல பில்லியன் கணக்கிலான மதிப்புள்ள சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. சுமார் 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் சொந்த வாழ்விடங்களை விட்டு அகதிகளாக இடம்பெயர்ந் துள்ளனர். தற்போதைய நிலையில் இஸ்ரேல் பெனான் மீது தாக்குதல் நடத்தி அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றது. அந்த நாட்டில் ஹிஸ்புல்லா போராலிகள் நிலைகொண்டிருக்கின்றனர் என்ற காரணத்தை மையமாக வைத்து அந்நாட்டின் மீது கடந்த இரண்டு வாரங்களாக தாக்குதலை தீவிரப்படுத்தி இருக்கின்றது.

மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். உணவுத் தட்டுப்பாடு, மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு, குடியிருக்க இடமில்லாமல் பரிதவிப்பு என்று பல்வேறுவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இஸ்ரேலின் இத்தகைய தாக்குதலின் பின்னால் பக்கபலமாக இருந்து வருவது அமெரிக்கா வாகும். இஸ்ரேலுக்கு தேவையான ஆயுதங்கள், நிதி உதவி என்று அனைத் தையும் வழங்கி வருவது ஐக்கிய அமெரிக்காவாகும். அதனால் உலகில் இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்கும் வெளியில் பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்நோக்கி வருவது அமெரிக்கர்களும் இஸ்ரேலியர்களுமாவர். இஸ்ரேல் பாலஸ்தீனம் மீது நடத்தி வரும் இவ்வாறான ஆக்கிரமிப்பு, ஏவகனைத் தாக்குதல் என்பன இன்று நேற்று நடக்கின்ற சம்பவங்கள் அல்ல. 1917 ஆம் ஆண்டு பிரித்தானியா பல்பூர் உடன்படிக்கை மூலம் பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியை இஸ்ரேலுக்கு விற்பனை செய்ததன் மூலம் அன்று முதல் இன்று வரையாக சுமார் 107 வருடங்களாக இவ்வாறான தாக்குதல்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. அழிவுகள் தொடர்கின்றன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் உலகம் பூராவும் பரந்து வாழும் இஸ்ரேலி யர்களுக்கு பழிவாங்கப்படலாம் என்ற அச்சுறுத்தல் இருந்து வருகின்றது. ஆனாலும் மத்தியகிழக்கிற்கு வெளியில் வசித்து வரும் இஸ்ரேலியர்கள் மீது எந்தவொரு நாட்டிலும் இதுவரையில் தாக்குதல் நடத்தப்பட்டதற்கான ஆதராங்கள் இல்லை. இஸ்ரேலியர்கள் அந்நாட்டில் எவ்வளவு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்தாலும் யூதர்கள் என்ற அடிப்படையில் உலகம் முழுவதிலும் வியாபித்த இனமாக வாழ்ந்து வருகின்றனர். அந்த வகையில் அண்மைக்காலமாக இலங்கை மீது நாட்டம் கொண்டவர்களாக உள்ளாசப் பிரயாணிகளாகவும் முதலீட்டாளர்களாகவும் வந்து குடியேறி இருக்கின்றனர். இலங்கையில் இதுவரையில் 575 இஸ்ரேலியர்கள் வசித்து வருவதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிக்கின்றார். ஆனாலும் உத்தியோகபூர்வமற்ற அறிக்கைகளிடி இலங்கையில் 1100 இஸ்ரேலியர்கள் இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இவர்களில் அதிகமான இஸ்ரேலியர்கள் அறுகம்பே, எல்ல, தெற்கில் குடாவெல்ல, ஹிக்கடுவ போன்ற பகுதிகளில் உள்ளாசப் பிரயாண ஹோட்டல்களை நடத்தி வருகின்றனர். அத்துடன் அறுகம்பே, கொழும்பு, வெளிகம போன்ற பிரதேசங்களில் சினகோக் என்ற யூத வழிபாட்டு தளங்களையும் அமைத்துள்ளனர்.

குறிப்பாக எல்ல மற்றும் அறுகம்பே பகுதிகளுக்கு அதிகமான இஸ்ரேலியர்கள் உள்ளாசப் பிரயாணிகளாக வருகின்றனர். இந்நிலையில் அறுகம்பே உள்ளாசப் பிரயாண பகுதியில் முஸ்லிம்கள் செரிவாக வாழும் பகுதியில் அவர்களது யூத ஹீப்று மொழியிலான வழிபாடு நடத்தக் கூடிய ஒரு தேவாலயமும் அமைக்கப் பட்டிருக்கின்றது. அத்துடன் இப்படியான தாக்குதல் ஒன்றுக்கான திட்டம் இருக்கின்றது என்ற எச்சரிக்கை தகவல் 14 நாட்களுக்கு முன்னர் கிடைத்ததாகவும் அது குறித்து அரசாங்கம் விரிவாக புலனாய்வுகளை செய்ததால் உடனடியாக அந்த தகவல்களை வெளிப்படுத்தவில்லை என்றும் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் கூறினார். ஆனாலும் இந்த விடயம் அரசியல் அரங்கில் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கின்றது.

ஏற்கனவே 2019 ஆம் ஆண்டு ஏப்ரில் தற்கொலை தாக்குதலுக்கு சில தினங்களுக்கு முன்னர் இந்திய புலனாய்வு பிரிவால் அப்படியான ஒரு தாக்குதல் தொடர்பான முன்கூட்டிய தகவல் இலங்கை புலனாய்வு பிரிவுக்கும் அப்போதைய பிரதிப் பொலீஸ் மா அதிபர் உட்பட பலருக்கு கிடைத்திருந்தும் அது தொடர்பான எந்தவிதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அவ்வாறு புலனாய்வு பிரிவு, பாதுகாப்பு கவுன்சில், ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிரிசேனா ஆகியோர் எடுத்திருந்தால் அந்த தாக்குதலை தடுத்திருக்கலாம் என்ற குற்றச்சாட்டுக்கள் இருக்கின்ற நிலையில் இந்த தகவல் குறித்து அரசாங்கம் போதிய கவனம் செலுத்தவில்லை என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டுள்ளன.

எதுவானாலும் கைது செய்யப்பட்டுள்ள மூன்று பேர்களையும் தீவிரமாக விசாரணை செய்ததில் அவர்களிடம் இருந்து அப்படியான தாக்குதல் தொடர்பான எந்தவிதமான தகவல்களும் கிடைக்கவில்லை. அவர்களிடம் தாக்குதலுக்கு தயாராகும் வகையில் அல்லது பயங்கரவாத செயற்பாடுகளுடன் சம்பந்தப்படும் வகையில் வெடிபொருட்களோ ஆயுதங்களோ இருக்கவில்லை என்ற தகவல்களையும் பாதுகாப்பு பிரிவு உறுதிப்படுத்தி இருக்கின்றது. எதுவானாலும் விசாரணைகள் தொடர்கின்றன. எதிர்வரும் மாதங்களில் இலங்கைக்கு கூடுதலான உள்ளாசப் பிரயாணிகள் வரும் சீசன் ஆரம்பிக்கின்றது. அதனால் இத்தகைய சந்தர்ப்பத்தில் இலங்கையில் பயங்கரவாத அச்சத்தையும் பீதியையும் கிளப்பி உள்ளாசப் பிரயாணிகள் வருகையை தடுத்து பொருளாதாரத்தை சீர்குழை ப்பதற்கான ஒரு சதித் திட்டமா என்ற கோணத்திலும் விசாரணைகள் முன்னெடுக் கப்படுவதாக பாதுகாப்புத்துறை தெரிவிக்கின்றது.




# வாசிப்பின் வாழ்வியல் பயன்கள்

வாழ்க்கைச் சோழிகளின் அழுத்தங்களுக்கு மத்தியில் அமைதியை தரக்கூடிய ஒன்றாக வாசிப்பு அமைகிறது.

வாழ்கைச் சோலிகளுக்கு வாசிப்பு மட்டுமே ஆறுதலாக இருந்தது. அதனால் இடைவிடாத வாசிப்பு எப்போதும் வாழ்வுக்கு உந்து விசையை தந்து கொண்டிருக்கும்

வாசிப்பதை, வாசித்ததை

எழுதுவதில் இன்பங்கண்டு வருவது தன்னைப்பேலவே பிறருக்கும் நிச்சயம் மகிழ்வளிக்கும்.

வாசிப்பதன் ரசத்தை தனியாக அனுபவிக்காமல்

பிறருக்கு பயன் தரும் வகையில் அமைத்துக் கொள்ள வேண்டும்

இல்லாவிடில் காலப்போக்கில்

எமது வாசிப்பு வீணாக அமையும். வாசிப்பதை தை விட மௌனித்திருக்கலாமென

கருதிவிட நேரிடும்.

இந்த நிலை மாறினால் வாசிப்பு தவிர்க்க முடியாத ஒன்றாக மாறும் அதன் விளைவாக வாசித்தவற்றை பிறரும் பயன் பெறும் வகையில் எழுதாமலிருக்கவே முடியாத நிலை தோன்றும்.

நம் வாசிக்கின்றவற்றை பிறருக்கும் அறிமுகம் செய்தோ அல்லது வழங்கியோ பகிர்ந்து கொள்கின்ற பொழுது

இல்லையற்ற இன்பம் ஏற்படும்.

வாசிப்பு எழுதவைக்கிறது

எழுத்து வாசிக்க வைத்து விடுகிறது

அடுத்தவர்கள் ஏன் வாசிக்கிறார்கள்?

நாம் ஏன் வாசிப்பதில்லை? என சிந்தித்தால்

உண்மையான மகிழ்வை வாசிப்பு வழியே காணலாம்.

வாசிப்பை அவர்கள் எப்படி உள்வாங்கிக்கொண்டார்கள்?

கொண்டாடி மகிழ்கிறார்கள்?

வாசிப்பை அவர்கள் எப்படி புனிதமாக பார்க்கிறார்கள்?

வாசிப்பு அவர்களில் எத்தகைய மாற்றங்களை உருவாக்குகிறது?

எத்தகைய தெறிப்புகளை உருவாக்குகிறது?

வாசிப்பின் மீதான ஈடுபாட்டை ஏற்படுத்த அவர்கள் என்ன செய்தார்கள்?

நாம் என்ன செய்துள்ளோம்?

வாசிப்புக்கு ஏதுவான சூழல் அவர்களிடம் எப்படி உள்ளது?

இவை எல்லாம் எம்மிடம் எப்படி உள்ளது?

புத்தகங்கள் வாங்குவதை

அதற்காக சேமிப்பதை

புத்தகக்கடைகளை

தரிசிப்பதை

புத்தகங்களை பரிமாறுவதை

பராமரிப்பதை

அவர்கள் எப்படி கவனமாக தேவை எடுத்து செய்கின்றனர்???

இதில் நாம் எங்கு உள்ளோம் அவர்களிடமுள்ள எழுத்தாளர்கள் பதிப்பகங்கள் மொழிபெயர்ப்பாளர்கள் புத்தக கடைகள் அது சார் சஞ்சிகைகள் எத்தனை எத்தனை எம்மிடம்???????

அந்த எழுத்தாளர்களது

பன்முக தேடல் ஆழமான வாசிப்பு

புத்தகங்களுடனான உரையாடல் ஈடுபாடு எத்தகையது,

எமது ஈடுபாடு எத்தகையது???

புத்தகங்களை அவர்கள் எவ்வாறு கருதுகிறார்கள்

நாம் எவ்வாறு கையாள்கிறோம்????

எம்மில் பலர் எமது வேதநூ லைக்கூட ரமழான் காலத்தில் மட்டும் தான் தூசுதுடைக்கிறார்கள்.

வாழ்வின் இறுதிச்சொட்டை

இழுக்க சிரமப் படுவோருக் கருகில் இருந்து முனுமுனுத்துவிட்டு விடுவதே பெரும்பாடு என்றுள்ள நிலையில் வாசிப்பு குறித்த பேசுவதும் எழுதுவதும் விமர்சிப்பதும் வீணோ என்று எண்ணத்தோன்றுகிறது

ஆனாலும் ஆங்காங்கே வாசகர்கள் உரையாடல்கள் மழைக்குப்பிந்திய

தூவானம் போல

வானவில் போல

தோன்றுவதும்

தென்படுவதும் இடம்பெறத்தான் செய்கின்றன.




நாச்சியாதீவு
பர்வீன்

# "பாவண்ணனின் நெல்லித் தோப்பு"

(கருணா மூர்த்தி)

இன்று அதிகாலை நடையின்போது ஆசிரியர் பாவனன் அவர்கள் பார்த்த விசித்திரமான பறவையின் உருவம் மீண்டும் மீண்டும் மனசில் மிதந்தபடி இருக்கிறது. மருத்துவமனையையொட்டி நீண்டு செல்லும் ஒரு மாமரக்கிளையில் அப்பறவை உட்கார்ந்திருந்தது. வழக்கமாக அந்த இடம் நாலைந்து காக்கைகளுக்குரியவை. ஒவ்வொரு நாளும் அவற்றின் கரைதல்களை அந்த இடத்தில் கேட்டு வந்திருக்கிறேன். இன்று திடீரென்று ஒரு மாற்றம். எப்படி இந்தப் பறவை இங்கு வந்து உட்கார்ந்ததோ? அதுவும் பெயர் தெரியாத விசித்திரப் பறவை. கழுத்தில் செவ்வரிகள் ஓடியிருந்தன. மைனா மாதிரிதான் உருவம், ஆனால் மைனா அல்ல அழகான கூர் அலகு பல வினாடிகள் அதன் அருகில் தயங்கி நின்று பார்த்தபடி இருந்தார்.

அந்தக் காக்கைகள் எங்கே?" என்று அதனிடம் கேட்க வேண்டும் போல் இருந்தது. அதன் மொழியில் அவர் கேள்வியை மாற்றிக் கேட்கும் திறமை மட்டும் அவருக்கிருந்தால் பல விஷயங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டிருப்பார்.


அந்தப் புதுமையான முகமும் வண்ணமும் குரலும் அவரைக் கட்டிப் போட்டுவிட்டன. வீட்டுக்குத் திரும்பிய பிறகும் அதே ஞாபகம். தினசரித் தாளின் ஓரங்களில் அவரது கைகள் அதன் உருவத்தைக் கிறுக்கின. குளிக்கப் போகிறபோது அப்பறைவையைப் போலவே ஒலி யெழுப்பியது அவரது வாய். என்னமோ தெரிய வில்லை, மனம் இன்று நிறைந் திருக்கிறது.

இப்படித்தான் ஆசிரியர் வாழப்பழகி இருக்கிறார். இப்படி வாழ்வது பிடித்துமிருக்கிறது. இந்த உலகின் முன் தன்னைத் திறந்து வைத்திருக்கிற அவரை ஈர்க்கும் பலவற்றையும் ஈடுபாட்டுடன் கவனிக்கிறார் ஆசை போடுகிறார் உள்வாங்கிக் கொள்கிறார்.

பறவை யானாலும் சரி. மனித னானாலும் சரி, மனசுக்குள் ஏந்திக் கொண்டு சமயம் வரும்போது அவற்றையெல்லாம் எழுத்தாக்கி தருகிறார் இந்த புத்தகத்தில் உள்ள அத்தனை கதைகளும் அப்படிப்பட்ட வகை சார்ந்த தான்.

இதில் மொத்தம் 18 சிறுகதைகள் இடம் பெற்றிருக்கிறது.

1. நெல்லித் தோப்பு.
2. சரண்
3. பொய்
4. பயணம்.
5. தனிமரம்
6. அறையும் அறை சார்ந்த இடமும்
7. நெருப்புத் திருவிழா.
8. செடி
9. தளை
10. ஈடு
11. வேலி
12. சாபம்
13. பாகம்
14. திசை தேடும் பறவை
15. விலை
16. பாம்பு
17. குரல்கள்
18. சூறை




நெல்லித்தோப்பு

சாதாரண கதை

ஒரு ஜமீன்தார் நிரம்ப சொத்து இருக்கிறது. அந்த கிராமமே அவரது கட்டுப்பாட்டில் இருக்கிறது .ஏனோ வாழ்ந்த மனைவி இவரது கொடுமை தாங்காமல் ஏழு வருடத்திலேயே பிரிந்து போய் விடுகிறாள் .

இவருக்கு குடி கூத்து இதுதான் வாழ்க்கை. 24 மணி நேரமும் அதிலேயே இருக்கிறார். ஊர் முழுக்க கூத்தி மற்ற கிராமங்களிலும் கூத்தி.

எனவே சிறு சிறு சொத்துக்களாக விற்றுக் கொண்டே வருகிறார்.

இதுபோக பெங்களூருக்கு சென்று குதிரை பந்தயம் என்கிற ரேஸ் ஆடுகிறார்.

இந்த நிலையில் தான் இந்த கதையை சொல்லுகின்ற கதாநாயகன் வேலைக்கு வருகிறான் இவரிடம்.

அவன் மூலமாகத்தான் இந்த நமக்கு சொல்லப்படுகிறது.

நெல்லித்தோப்பு அது குறித்து இரண்டு பக்கங்களுக்கு குறையாமல் விபரமாக எழுதி வருகிறார். அரசாங்கம் அந்த நெல்லித்தோப்பு கேட்கிறது பெரிய தொழிற்சாலை அமைப்பதற்காக.

அரசாங்கம் கேட்கிறதோ இல்லையோ இடைத்தளங்களில் வந்து நிரம்ப விலை கொடுத்து அதை வாங்கிக் கொள்கிறார்கள்.

அவருக்கு இருந்த கடைசி சொத்து போய்விடுகிறது. இதுதான் கதை. நெல்லித்தோப்பு குறித்து ஒரு தனி கதையை இந்த புத்தகத்தில் எழுதி இருக்கிறார். எல்லாம் ஆசிரியரின் கற்பனைக்கு எட்டு வகையில் அவரது எழுத்துக்கள் அமைந்திருக்கிறது.

2) சரண்

மாமனார் திட்டிவிட்டார் என்பதற்காக வீட்டு விட்டு வெளியே வந்து விடுகிறார் சுப்பையா .மாமனார் திட்டும் பொழுது மனைவியும் கூடமாக பேசி விடுகிறார் .அவமானம் தாங்காமல் வீட்டை விட்டு விட்டுவிட்டு வெளியே வருகிறார் .

கால் போன போக்கில் தடம் தெரியாமல் வந்து கொண்டிருக்கின்ற வேளையில் கருப்பண்ணசாமி கோயில் கவனிப்பாறட்டு கிடக்கிறது ஒரு கிராமத்தில்.

அதை சுத்தம் செய்து அதை படிப்படியாக ஒரு கோவில் ஆக்கி எல்லோரும் வந்து கும்பிடச் செய்கின்ற அளவிலே இருக்கின்றார்.

இவரது பக்தியை பார்த்து விழுப்புரத்திலிருந்து ஐயப்ப குருசாமி வந்து இந்த கோயிலைப் பார்த்து மாலை போட்டுக்கொள்ள சொல்லுகிறார். இவர் மாலை போட்டுக்கொண்டு சபரிமலை செல்கிறார் .இரண்டு வருடங்களுக்குப் பிறகு இவரை குருசாமி ஆகி விடுகிறார் .

மூன்று ஆண்டுகள் கழித்த பிறகு இவருடன் பழகிய நண்பர் வந்து இவரை பார்க்கிறார். இவர் ஊருக்கே ஒரு குருசாமி போல விளங்கிக் கொண்டிருக்கிறார். இந்த நிலையில் பழைய நம்பர் வந்து வீட்டுக்கு வா என்று அழைக்கிறார். இவர் ஐயப்பனை பார்த்து மௌனமாக இருந்து விடுகிறார்.

மனைவியிடம் இருந்து இரண்டு மூன்று கடிதங்கள் வருகிறது. அதற்கு பதில் போடாமல் பார்க்காமல் படிக்காமல் தீயில் கொளுத்தி விடுகிறார்.

இந்த நிலையில் ஒருநாள் மீண்டும் பழைய நண்பர் வருகிறார் உனக்கென்ன கல்மனதா வா வா என்று அழைக்கிறார். இவர் அப்போது மௌனம் காக்கிறார்.

அதன் பிறகு ஒரு தந்தி வருகிறது. இரவு மணி 10 இருக்கும். தந்தியை பார்க்கிறார் அவரது மனைவி தற்கொலை செய்து கொண்டதாக தெரிகிறது. உடனே யாருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் கோயிலை விட்டு குளத்தை விட்டு ஊரை விட்டு விட்டு சென்று விடுகிறார்.

அடுத்த நாள் நண்பர் தேடி வருகிறார். அந்த கோயிலைப் பார்த்துக் கொண்டிருந்த இவரது சிஷ்யன் என்ன என்று கேட்க விபரம் சொல்கிறார். சிஷ்யன் கேட்கிறான் எப்பொழுது மனைவி இறந்தார் என்று. நேற்று இரவு 10 மணிக்கு என்று சொல்கிறார்.

உடனே அந்த சிஷ்யன் ஒரு பெரிய பொய் சொல்கிறான் .

அதே பத்து மணிக்கு தான் நானும் அவரும் இங்கிருந்து பேசிக் கொண்டிருந்தோம். திடீரென்று பெரிய வெளிச்சம் தென்பட்டது. அந்த வெளிச்சத்தை காண முடியாமல் கண்களை மூடிக்கொண்டேன்.

கண்ணைத் திறந்து பார்த்தபோது அவரும் இல்லை வெளிச்சமும் இல்லை இருட்டாக இருந்தது என்று சொல்லி அவரை அனுப்பி விடுகிறார்.

இது ஆசிரியரின் கற்பனையா உண்மையா என்று தெரியவில்லை. அவர் மனைவியை பார்க்க போனார் திரும்பி வந்தாரா என்கிற எதுவுமே இல்லாமல் கதை அப்படியே முடிந்து விடுகிறது.

இதுபோலத்தான் ஒவ்வொரு கதையும் சிறப்பாக எழுதப்பட்டிருக்கிறது.

# மழை..மழை..

விண்ணெங்கிலும்
கார்முகில் கூட்டம்
நிறைந்து கிடக்க..
விடியலும்..
விளங்காத நாட்கள்!

மண்ணெங்கிலும்
வெள்ளமாய்..
மழைநீர் குடிகொள்ள
மாந்தர் வாழ்க்கை
சற்றே..
கேள்விக்குறிதான்?

மார்ச்சளி வரும்
குடை பிடித்து
வா..மகனே(ளே) என்ற..
அன்னையின்
அன்பு உத்தரவுக்கு
அடங்க மறுப்பு!

குடைகளை மடித்து
குடுகுடுவென்று மழையில்..
குதுகாலமாய்த் துள்ளித் திரியும்
குட்டி மீன்கள் அவர்கள்!

இன்னல்கள்..
இடைஞ்சல்கள் புரியாத..
இளம் பிஞ்சுகளுக்கு
இம்மழை வெள்ளம்
இன்பமானது தான்!

பாடசாலை நிறைவடைந்து
பாதையில் வரும் போது..
பார்வைக்குத் தெரியும்..
பாலர் கூட்டத்தின்
பாய்ச்சல்களை!

மழையில் நனையாதே..

சிற்றாறு போல்
சிதறியோடும் மழை நீரில்..
சிறகு விரித்துப் பறந்திடும்..
சின்னச் சிட்டுக்களின்
சிரிப்புக் கொண்டாட்டங்கள்!

காண்பவர்க்கெல்லாம்..
கண்கொள்ளா காட்சி தான்!
கண்களுக்கு மட்டுமல்ல..
மனதுக்கும் தான்!
மழலைகளின்..
மகிழ்ச்சியும்!மழையின் ..
மகிமையும்!!

– பயாஸா பர்வீன்–




பயாஸா பாஸில்

பிடித்துக்கொள்ள
முடியவில்லை
என்றால்
வாழ்க்கையே
அங்கு
தோல்வியின்
சோகத்தோடு
தான்
நின்றிருக்கும்.

தொழில் வெற்றி
எப்போதும்
முயற்சியின் பலன்
இன்றைக்கு இல்லை
நாளைக்கு அல்லது
மறுநாள் என்று என்றோ
ஓர் நாள் முயற்சித்தவர்
கையில் சேரத்தான் போகிறது..

ஆனால் உண்மையான உறவொன்று முயற்சிப்பதால் மட்டும் கிடைப்பதில்லை.. கிடைத்த பின்னும் தக்க வைத்துக் கொள்வதில் தோற்றவர் ஏராளம்.

தனியாக பயணிப்பதை தெரிவு செய்பவர்க்கு அதுவும் ஒருவித இனிமை தான் என்கிறார்கள்.... ஏதோ ஓர் வகையில் உடைக்கப்பட்ட துகள்கள் அவர்கள் அப்படித்தான் தோன்றும்.

ஆனாலும் பயணத்தின் எல்லையில் புலப்படும் பயணம் முடியும் தருணத்தில் திரும்பிப் பார்க்கும் போது

யாராவது கரம் பற்றி கடந்து வந்திருக்க வேண்டும்.. அப்பயணம் இனிதாய் முடிய...

நிதர்சனம்..!

ஆலமரமேயானாலும் தாங்கிக்கொள்ள விழுதுகள் தேவைப்படுவதில்லையா..

ஒப்பாகத்தான்...

அனைத்து படிக்கட்டுகளிலும் யாராவதுிழளவைளைந நநெசபல ஆக உடனிருக்க வேண்டும்..



நமக்கென வாழ்க்கையில் எல்லா தடங்களிலும் உற்சாகமூட்டிக் கொண்டே இருக்க யாரேனும் ஒருவர் உடனிருந்தே ஆக வேண்டும்.

விழும் போது மட்டுமல்ல எழும் போதும் மகிழ்வினை பகிர்ந்து கொள்ள உரிமையோடு பெருமை கொள்ள ஓர் உறவு இருந்தேயாக வேண்டும்.

இலக்கை அடைந்து உயரத்தில் நிற்கும் போதும் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கும் போது யாராவது அங்கே நின்றிருக்க வேண்டும்.

வெற்றியாளனாய் வாழ்க்கை நம்மை அடையாளப்படுத்தும் போது உரிமையோடு இது நமக்கான வெற்றி என ஒருவரையாவது பற்றிப்

- Rizla Ajwad -

## மனநலமும் ஆலோசனையும் 52

# நிறைய சொல்லனும் ஆனால்...

சொல்ல வேண்டிய சில விடயங்களை சொல்ல எடுத்த பிறகு ஆனால்.... என்று சொல்லி விட்டு அப்படியே மௌனம் காப்பவர்களை நாம் கண்டிருக்கலாம்.

நிறையப் பேசனும் ஆனால்.....

நிறைய சொல்லனும் ஆனால்........

இப்படி ஆனால் என்கிற தடுப்புச் சுவரை வைத்து சொல்ல வேண்டிய எத்தனையோ விடயங்களை சொல்ல முடியாமல் அல்லது சொல்ல தெரியாமல் சங்கடப்படும் பலர் எம்மில் இருக்கின்றனர். இந்த நிலையை நானும் நீங்களும் பெரும்பாலும் அனுபவித்து இருக்கலாம்.

ஒரு விடயத்தை வெளிப்படுத்த முடியாமல் மனதுக்குள்ளே அழுத்தி வைக்க முயற்சி செய்வது ஒரு பெரிய போராட்டம். அது இலகுவான போராட்டம் அல்ல. சிந்தனையில் நடைபெறும் ஒரு போராட்டம். ஒருவர் சொல்ல வந்ததை சொல்லாமல் ஆனால்.... என்று சொல்லி விட்டு சங்கடத்தோடு இருக்க முற்படுவதற்கு பின்னால் யாரும் அறியாத பல காரணங்கள் இருகலாம்.

- சொன்னால் என்ன ஆகுமோ என்ற பயம்

- மற்றவர்கள் எங்களை எப்படி உணருவார்கள் என்று கவலை

- மற்றவர்கள் எங்களை பலவீனங்களை தெரிந்து கொள்வார்கள் என்ற எண்ணம்

- இதை சொன்னால் எங்கள் உறவில் முறிவு வந்து விடுமோ எனும் அச்சம்

- நேரடியாக வெளிப்படுத்த ஏதோ ஒரு தடை

- நம்பிக்கையின்மை

- எங்கள் எண்ணங்கள் அல்லது உணர்வுகள் மீது எங்களுக்கே சந்தேகம்

- பகிர்ந்து கொள்வதில் தயங்கம்.

- பிழையாக புரிவார்கள் என்ற எண்ணம்

இப்படி பல காரணங்கள் இருக்க வாய்ப்பு உண்டு

எங்கள் உணர்வுகள் எங்களது வாழ்க்கை அனுபவத்தின் ஒரு பகுதியாகும். அவற்றை வெளிப்படுத்தாமல் புதைத்து வைத்துக் கொள்வது இறுதியில் எங்கள் அடையாளத்தையும் சுய உணர்வையும் கட்டுப்படுத்தி எங்கள் தனிப்பட்ட இலக்குகளை அடைவதைத் தடுக்கச் செய்துவிடும்.

தொடர்ந்து அல்லாமல் எப்போதாவது இப்படி சொல்ல வேண்டியவற்றை சொல்லாமல் ஆனால்.... என்று உணர்ச்சிகளை அடக்கி ஆரோக்கியமாக செயல்படுவது பிரச்சனைகளை ஏற்படுத்தாது.

இருப்பினும், இது ஒரு மாதிரியாக அல்லது பழக்கமாக மாறி, உண்மையாக தொடர்புகொள்வதற்கான எங்கள் திறனைப் பாதித்தால் அது காலப்போக்கில் ஒரு சிக்கலாக மாறலாம்.

நாங்கள் சொல்ல வேண்டிய எங்கள் உணர்ச்சிகளை சொல்லாமல் இருக்கும் போது, சிலசமயம் அவை மனதுக்குள்ளே குவிந்துவிடும்.

இது ஒரு குற்ற உணர்வாக மாறலாம்.

உண்மையான தொடர்பு குறைந்து உறவுகள் பாதிக்கப்படலாம்.

நேசமான நண்பர் அல்லது மிகவும் நெருக்கமானவர் எங்களை அறியாத ஒரு அந்நியராக மாறலாம்.

இப்படி பல சிக்கல்களை உருவாக்கிவிட முடியும்.

எனவே நாம் பயம் இல்லாமல், அவசரம் ஆவேசம் இல்லாமல், முரட்டுத்தனமாகவும் இல்லாமல் எங்களுக்குள் எழுகின்ற எதிர்மறையான உணர்வுகளைக் கூட பகிர்ந்து கொள்ள அழகான வழிகள் உள்ளன. நாங்கள் அவறங அடக்க வைக்கத் தேவையில்லை. எங்கள் மீது அன்பானவர்களிடமும் நாங்கள் உண்மையாக நம்பும் நபர்களிடமும் முதலில் உணர்ச்சிபூர்வமாக உரையாடலாம்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# பேருவளை நகர சபை ஏற்பாட்டில் மீலாத் விழா நிகழ்வு







(பீ.எம் முக்தார்)

பேருவளை நகரசபை நிருவாகத்தால், நடாத்தப்பட்ட மீலாதுன் நபி விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலயத்தின் அஷ்ஷெய்க். முஸ்தபா ஞாபகார்த்த மண்டபத்தில் நகர சபைச் செயலாளரும் மீலாத் விழா ஏற்பாட்டுக் குழு தலைவியுமான ரனசிங்ஹ குணவர்தன தலைமையில் (2024-10-26) கடந்த சனிக்கிழமை காலையில் நடைபெற்றன.

பேருவளை நகர சபை வரலாற்றில் முதற்தடவையாக நடைபெற்ற இந்நிகழ்வில் பேருவளை பகுதியில் இயங்கும் அரச, தனியார் சர்வதேச பாடசாலைகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கிடையே நடாத்தப்பட்ட சமய அறிவியல் போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்திய சகல பிள்ளைகளதும் நிகழ்சிகள் மேடையேற்றப்பட்டன. அத்துடன் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பிள்ளைகளுக்கு பரிசுகளும், பதக்கங்களும், சான்றிதழ்களும் அதிதிகளினால் கையளிக்கப்பட்டன.

ஆரம்பத்தில் பேருவளை டீ.எல் சேனாநாயக்க மகா வித்தியாலய மாணவி அன்னல் நபியின் புகழ் பாடும் ”விருது” பாடல் ஒன்றை இசைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து நிகழ்வுக்கு தலைமை வகித்த நகர சபை செயலாளர் திருமதி. ரனசிங்ஹ குணவர்தன வரவேற்புரையுடன் அறிமுக உரையையும் நிகழ்த்தினார்.

அதன் போது அவர் கூறியதாவது, எமது நகர சபை பகுதிக்குட்பட்ட தமிழ், சிங்களம், ஆங்கில மொழி பாடசாலைகளில் பயிலும் பௌத்த, கிறிஸ்தவ, இந்து, முஸ்லிம் பிள்ளைகளின் சமய அறிவை விருத்தி செய்வதற்கு ஒவ்வொரு சமயங்களின் பண்டிகைகளை முன்னிட்டு மாணவர்களின் மத்தியில் மும்மொழிகளிலுமான அறிவியல் போட்டிகளை நடாத்தி பரிசில்களை வழங்கும் திட்டத்தை முன்னெடுக்கும் முன்னோடியாகவே இன்று இந்நிகழ்வை ஒழுங்கா செய்தேன்.

முகம்மது நபி அவர்கள் முன்மாதிரியாக வாழ்ந்த மாமனிதர். அவர் கல்விக்கும் முன்னுரிமை கொடுத்திருக்கிறார். கற்பவனாக இரு, கற்றுக்கொடுப்பவனாக இரு, கற்போருக்கு உதவுபவனாக இரு, நான்காமவனாக இருந்து விடாதே. என்று போதித்துள்ளதாக நான் அறிந்திருக்கிறேன். அந்த வகையில் இந் நிகழ்வு கல்விக்து உதவும் ஒரு நிகழ்வு என்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

என்னுடன் நகர சபை அதிகாரிகள், ஊழியர்கள் பலரும் இந்நிகழ்வுக்கு பெரிதும் பங்களிப்புச் செய்தார்கள் என்றார்.

நகர சபை முகாமைத்துவ அதிகாரியும், மீலாத் குழு தலைவியுமான ஷிஹானா காதர் உரையில், எமது நகர சபை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள் இதுவாகும். எமது மாணவர்களின் சிறப்பான ஆற்றல்களை இந்நிகழ்வு வெளிப்படுத்தாயுள்ளன. இதில் எமது செயலாளர் சிறப்பான பங்களிப்புக்களை வழங்கியுள்ளார். மேலும் எமது பகுதி கொடை வள்ளல்களும் இதற்காக கை கொடுத்துள்ளனர்.

பேருவளை பிரதேச செயலாளர் ஷானக பெரேராவின் உரையில்,

பேருவளை பல்லின, பன்மத மக்கள் இணைந்து, இரண்டறக்கலந்து வாழும் பிரதேசம். இத்தகைய நிகழ்வு இன ஐக்கியத்திற்கு ஒரு முன்மாதிரியாகும். முகம்மது நபியவர்கள் மனிதன் மற்றும் சகல உயிரினங்கள் மீதும் அன்பு, கருணை, ஆதரவு காட்டும்படி நற்போதனை புரிந்துள்ளார்கள். உலக அமைதிக்கு சிறந்த முன்மாதிரிகளை காட்டிச் சென்றுள்ளார்கள். இங்குள்ள முஸ்லிம் மக்களோடு பணியாற்றக் கிடைத்தமையை இட்டு இத்தகைய நிகழ்வில் கலந்து கொள்ளக் கிடைத்தமையை இட்டும் மேலாக கருதுகிறேன்.

விஷேட அதிதியாக கலந்து கொண்டு உரையை நிகழ்த்திய விரிவுரையாளர் எம்.பீ.எம் முகம்மத் நவாஸ் மௌலவியின் உரையில்,

மனித குலம் நிம்மதியாகவும், சீரும் சிறப்புமாகவும் வாழ ரஸூல் (ஸல்) அவர்களின் வாழ்விலும், வாக்கிலும் பூரணமான முன்மாதிரிகள் உள்ளன. ஒரு மனிதனின் உள்ளம் சீரானால் அவனது சகல செயற்பாடுகளும் மிகவும் சிறப்பாக அமையும் என்பதை முகம்மது (ஸல்) அவர்கள் மிகவும் சுருக்கமாக எடுத்தியம்பியுள்ளார்கள்.

சமூகத்தில் சாந்தி, சமாதானம் பிரதிபலிக்க அது ஒவ்வொரு வீடுகளில் இருந்தும் உருவாக்கப்பட வேண்டும். பிள்ளைகள் பெற்றோர் மீதும், பிள்ளைகள் பெற்றோர் மீதும் அன்பு, கருணை செலுத்த வேண்டும். இதற்கும் நபி (ஸல்) அவர்கள் முன்மாதிரி காட்டியுள்ளார்கள்.

ஒருமுறை ரஸூல் (ஸல்) அவர்கள் இரவு வீடு வந்த போது மனைவி ஆயிஷா நாயகியவர்கள் நன்கு உறக்கத்தில் இருந்தார்கள். அவரது தூக்கத்தை கலைக்காது நபியவர்கள் மாவு எடுத்து பிசைந்து ரொட்டி தயாரித்தார்கள். சாப்பிடுவதற்காக சகல ஒழுங்குகளையும் செய்த பின்னர் ஆமிஷாவை சாப்பிட எழுப்பினார்கள். இப்படி குடும்ப நல்லிணக்க உறவு உச்சகட்ட முன்மாதிரியல்லவா?

தவறு ஒன்றைத் திருத்துவதிலும் ஏராளமான முன்மாதிரிகளை காட்டித் தந்துள்ளார்கள். மதீனா பள்ளியில் காட்டரபி ஒருவர் சிறுநீர் கழித்த வேளையில் ஸஹாபாக்கள் கொதித்தெழுந்த போது, மிகவும் அமைதியான முறையில் ரஸூல் (ஸல்) அவரை அணுகி, அன்பாக கதைத்து முரட்டு அரபியின் தவறை சுட்டிக் காட்டி அவர் திருந்தி நடக்க வழி செய்ய பண்பாடு மிகவும் உன்னதமானது.

பேருவளை நகர சபை ஆயுர்வேத வைத்தியர் சந்திமா அல்விஸ் களுத்துறை நகர சபை ஆணையாளர், செயலாளர், விஸ்டம் சர்வதேச பாடசாலை அதிபர் அப்துல் காதர் உள்ளிட்ட பாடசாலை அதிபர்கள், அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகள், மாணவர்களின் பெற்றோர்கள் உள்ளிட்ட பெருந்திரளானோரால் மண்டபம் நிரம்பி வலிந்திருந்தது.

உரைகளுக்கு மத்தியில் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளின் மும்மொழிகளிலுமான உரைகள், இஸ்லாமிய கீதங்கள், ஹதீஸ் மனனம், கஸீதாக்கள் போன்ற நிகழ்ச்சிகளாலும் சபை களைகட்டியது.

# இலங்கையை வீழ்த்தி முதல் முறையாக சம்பியன் மகுடம் சூடியது ஆப்கானிஸ்தான்




அரபாத் பஹுர்தீன்

வளர்ந்துவரும் அணிகளுக்கு இடையிலான ஆசியக் கிண்ண ரி20 தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கை அணியை 7 விக்கெட்டுக்களால் வீழ்த்திய ஆப்கானிஸ்தான் அணி முதல் முறையாக சம்பியன் கிண்ணத்தை வெற்றி கொண்டு வரலாறு படைத்தது.
ஆசிய கிரிக்கெட் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஓமானில் இடம்பெற்றுவந்த வளர்ந்துவரும் அணிகளுக்கான ஆசியக் கிண்ண ரி20 தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்றிருந்ததுடன் ஒரு குழுவில் 4 அணிகள் வீதம் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு முதல் சுற்று லீக் ஆட்டம் இடம்பெற்றது. பின்னர் குழுநிலையில் முதல் இரு இடங்களைப் பிடித்த அணிகள் அரையிறுதியில் மோதின. அதற்கமைய முதல் அரையிறுதிப் போட்டியில் பாகிஸ்தான் வளர்ந்துவரும் அணியை இலகுவாக வீழ்த்திய இலங்கை அணி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.
பின்னர் இடம்பெற்ற 2ஆவது அரையிறுதிப் போட்டியில் பலமிக்க இந்திய அணியை பந்தாடிய ஆப்கானிஸ்தான் வளர்ந்து வரும் அணி முதல் முறையாக இத் தொடரின் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்று அசத்தியது. அதற்கமைய (27) இடம்பெற்ற இறுதிப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. இதற்கமைய களமிறங்கிய இலங்கை அணியின் முன்வரிசை வீரர்கள் நிலைக்கத் தவறி சொற்ப ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினர். ஒரு கட்டத்தில் இலங்கை அணி 15 ஓட்டங்களுக்கு முதல் 4 முக்கிய விக்கெட்டுக்களையும் இழந்து பறிதவித்தது.
பின்னர் மத்திய வரிசையில் வந்த ஷஹான் ஆராய்ச்சி பொறுப்புடன் ஆடி அரைச்சதம் கடந்து ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 133 என்ற கௌரவமான ஓட்டத்தினைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் பிலால் மற்றும் ஹஸான்பர் ஆகியோர் முறையே 3 மற்றும் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.
பின்னர் இலங்கை அணியால் நிர்ணயிக்கப்பட்ட 134 என்ற இலகுவான வெற்றி இலக்கினை நோக்கி பதிலளித்த ஆப்கானிஸ்தான் அணி சித்திக்குல்லாஹ் வின் பொறுப்பான ஆட்டமிழக்காமல் பெற்ற 55 ஓட்டங்களினதும், கரிமின் 33 ஓட்டங்களின் உதவியுடனும் 18.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 134 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் மிக இலகு வெற்றி பெற்றதுடன், முதல் முறையாக வளர்ந்துவரும் அணிகளுக்கு இடையிலான ஆசியக் கிண்ண ரி20 சம்பியன் மகுடத்தை வெற்றி கொண்டு வரலாறு படைத்தமை குறிப்பிடத்தக்கது.

## லாலிகா உதைப்பந்தாட்ட தொடர்:

# மெட்ரிட்டை பந்தாடிய பார்சிலோனா




உலகப் புகழ் பெற்ற லாலிகா உதைப்பந்தாட்ட தொடரில் பலமிக்க ரியல் மெட்ரிட்டிற்கு எதிரான போட்டிகள் 4:0 என்ற கோல்கள் அடிப்படையில் இலகு வெற்றி பெற்று முதல் இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது பார்சிலோனா.
கழகங்களுக்கு இடையிலான உதைப்பந்தாட்ட தொடர்களில் முதன்மைத் தொடரான லாலிகா உதைப்பந்தாட்ட தொடரின் உதைப்பந்தாட்ட எதிரிகளாக வர்ணிக்கப்படுகின்ற ரியல் மெட்ரிட் மற்றும் பார்சிலோனா ஆகிய இரு கழகங்களுக்கும் இடையிலான பதினோராவது வாரத்துக்கான போட்டி நேற்று முன்தினம் சென்டியாகோவில் இடம்பெற்றது.
இப்போட்டியின் முதல் பாதி ஆட்டம் ஆரம்பிக்க பார்சிலோனா கழகத்தின் ஆதிக்கமும் மேலோங்க ஆரம்பித்தது. இருப்பினும் ரியல் மெட்ரிட் கழகத்தின் பின்வரிசை வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டமையால் பார்சிலோனாவால் கோல் கணக்கை ஆரம்பிக்க முடியவில்லை. இதனால் முதல் பாதி கோலின்றி சமநிலையில் முடிந்தது. பின்னர் இடம்பெற்ற 2ஆவது பாதி ஆட்டத்திலும் பார்சிலோனா வீரர்களின் ஆதிக்கம் மேலோங்கியது. இதனால் போட்டியின் 54 ஆவது நிமிடத்தில் லிவண்டெஸ்கி கோல் கணக்கை ஆரம்பித்து அடுத்த 2ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலையும் உள்ளனுப்பி கோல் கணக்கை 2:0 என மாற்றினார்.
பின்னர் ஆட்டத்தின் 77ஆவது நிமிடத்தில் யமின் யமால் தன் பங்கிற்கு ஒரு கோலையும், 84 ஆவது நிமிடத்தில் ரபண்ஹா ஒரு கோலையும் அடித்துக் கொடுக்க போட்டியின் முழு நேர ஆட்ட முடிவில் பார்சிலோனா கழகம் தம் எதிரிக் கழகமான ரியல் மெட்ரிட் கழகத்தினை 4:0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி புள்ளிப் பட்டியலில் தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## சுழலில் மிரட்டிய பாகிஸ்தான், இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை வெற்றி கொண்டது





இங்கிலாந்து அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 3ஆவதும், இறுதியுமான போட்டியில் சுழலில் அசத்திய பாகிஸ்தான் அணி 9 விக்கெட்டுக்களால் இலகு வெற்றி பெற்றதுடன் தொடரை 2:1 என தன் வசப்படுத்திக் கொண்டது.
சுற்றுலா இங்கிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க பாகிஸ்தான் சென்றிருந்தது. இதில் முதல் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றிருக்க , 2ஆவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்று தொடரை 1:1 என சமன் செய்திருந்தது.
இந்நிலையில் கடந்த 24ஆம் திகதி ராவல்பிண்டி இல் ஆடம்பித்த தொடரை தீர்மானிக்கும் 3ஆவதும், இறுதியுமான போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.
இதற்கமைய களம் நுழைந்த இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களை சுழல்பந்து வீச்சாளர்களான சாஜிட்கான் மற்றும் நுஹ்மான் அலி ஆகியோர் விரைவாக பெவிலியன் அணிப்பி வைக்க 267 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது இங்கிலாந்து அணி.
துடுப்பாட்டத்தில் ஜெமி ஸ்மித் 89 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சாஜிட்கான் 6 விக்கெட்டுகளையும், நுஹ்மான் அலி 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.
பின்னர் தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணிக்காக சவூட் சகீல் தனித்துப் போராடி 134 ஓட்டங்களையும், பந்துவீச்சில் அசத்திய நுஹ்மான் அலி மற்றும் சாஜிட்கான் ஆகியோர் முறையே 44 மற்றும் 48 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க சகல விக்கட்டுக்களையும் இழந்து 344 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் ரெஹான் அஹமட் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.
பின்னர் 77 ஓட்டங்கள் முதல் இன்னிங்ஸ் பின்னிலையுடன் தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர்கள் நிலைக்கத் தவறியதுடன் மீண்டும் நுஹ்மான் அலி மற்றும் சாஜிட்கான் ஆகியோரிடம் சரணடைய இங்கிலாந்து அணி 112 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் ஜோ ரூட் 33 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார். பந்துவீச்சில் நுஹ்மன் அலி மற்றும் சாஜிட்கான் ஆகியோர் முறையே 6 மற்றும் 4 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டினர்.
பின்னர் 35 என்ற வெற்றி இலக்கினை நோக்கி தமது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் அணி 3.1 ஓவரில் ஒரு விக்கெட்டினை மாத்திரம் இழந்து 37 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுக்களால் இலகு வெற்றியைப் பெற்றதுடன் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:1 என கைப்பற்றியது. போட்டியின் நாயகனாக சதம் அடித்த சவுத் சகீலும், தொடரின் நாயகனாக சாஜிட்கானும் தெரிவானமை குறிப்பிடத்தக்கது.




## லூவிஸின் சதத்தால் மே.இ.தீவுகளுக்கு ஆறுதல் வெற்றி

# இருப்பினும் தொடர் இலங்கை வசம்

இலங்கை அணிக்கு எதிராக 3ஆவதும், இறுதியுமான ஒருநாள் போட்டியில் லிவிஸ ின் அதிரடி சதம் மற்றும் ருத்தர்பேர்டின் அரைச்சதம் ஆகியன கைகொடுக்க டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 8 விக்கெட்டுக்களால் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி பெற்ற போதிலும் தொடரை 2:1 என தனதாக்கியது இலங்கை அணி.
கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 போட்டிகள் கொண்ட ரி20 மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் ஆகிய வெள்ளைப் பந்து தொடரில் பங்கேற்றிருந்தது. இதில் ரி20 தொடரை இலங்கை 2:1 என வென்றெடுத்தது.
பின்னர் இடம்பெற்ற 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் இரு போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றி பெற்று தொடரை தனதாக்கியிருந்தது.
இந்நிலையில் 26ஆம் திகதி இடம்பெற்ற 3ஆவதும், இறுதியுமான ஒருநாள் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை இலங்கை அணிக்கு வழங்கியிருந்தது.
அதற்கமைய ஆரம்ப வீரர்களாக பெத்தும் நிசங்க மற்றும் அவிஷ்க ஜோடி களமிறங்கி சிறந்த ஆரம்பத்தினை வழங்கியது. இந்நிலையில் அவிஷ்க 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அப்போது இலங்கை அணி இலங்கை அணி 17.2 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 87 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் போட்டியில் மழை குறுக்கிட்டது.
தொடர்ந்து ஐந்து மணித்தியாலங்கள் போட்டி தடைப்பட்டு போட்டி பின்னர் ஆரம்பமாகி அணிக்கு 23 ஓவர்கள் கொண்ட போட்டியாக குறைக்கப்பட்டு நடைபெற்றது. அதற்கமைய பெத்தும் நிசங்க பெற்ற பொறுப்பான 56 மற்றும் குசல் மெண்டிஸ் பெற்ற அதிரடியான 56 ஓட்டங்களும் கைகொடுக்க இலங்கை அணி 23 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 156 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.





பின்னர் டக்வர்த் லூயிஸ் முறையில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு வெற்றியிலக்காக 23 ஓவர்களுக்கு 195 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.
அதற்கமைய பதிலுக்கு களம் நுழைந்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஆரம்ப வீரரான பிரண்டன் கிங் 16 ஓட்டங்களையும் , சாய் ஹோப் 22 ஓட்டங்களையும் பெற்று ஏமாற்றம் கொடுத்த போதிலும் மற்றைய ஆரம்ப வீரரான லூவிஸ் இலங்கை பந்துவீச்சை வெளுத்துத் தள்ளினார்.
அவருடன் களத்திலிருந்த ருதர்போர்ட் தன் பங்கிற்கு அதிரடி காட்டி மிரட்டி (50) அரைச்சதம் பூர்த்தி செய்தார். தொடர்ந்தும் களத்திலிருந்த லூவிஸ் 61 பந்துகளில் 102 ஓட்டங்களை பெற்றுக் கொடுக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி 22 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 196 ஓட்டங்களை பெற்று டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இப்போட்டியின் நாயகனாக சதம் அடித்த லூவிஸ் தெரிவாக, தொடரின் நாயகனாக இலங்கை அணியின் தலைவ ரான சரித் அசலங்க தெரிவானார். இப் போட்டியில் இலங்கை அணி தோல்விகண்ட போதிலும் முதல் இரு போட்டிகளில் வெற்றி பெற்றமையால் இலங்கை அணி தொடரை 2:1 என கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.